REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—பங்குனி கக, 24-3-'46—ஞாயிறு | இதழ் 34

JAFFNA COLLEGE LIBRARY, MAR 25 1946 VADDUKODDAI, CEYLON.

# தர்மவழியில் வியாபாரம்

## பேராசிரியர் குமரப்பா உபதேசம்

[நமது விசேஷ நிருபர்]

**வியாபாரத்தின் அடிப்படை பலாத்காரமாக விருக்கின்றது. இது ஏகாதிபத்தியத்தின் அம்சம். மேற்றிசைப் பொருளாதாரத்துக்கு அச்சாணி இம்சை. இத்தகைய ஏகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்வதற்கு யுத்த வீரர்கள் வேண்டப்படுகின்றனர். சக்கிராதிபத்தியங்கள் பத்தினிப் பெண்களாகவும், யுத்த வீரர்கள் அத்தெய்வங்களுக்குப் பலியிடப்பெறும் ஆடு மாடுகள் போலவுமல்லவா தோன்றுகின்றனர். இது அக்கிரமச் செய்கையாகும்.**

**பணத்தைக்கொடுத்து** ஒரு பொருளைப் பெறும்போது ஓர் உயர்ந்த மதிப்பு வேண்டுமென எவருங் கருதுவதில்லை. குழந்தை ஒன்றின் கழுத்தைத் திருகிவிட்டு அக்குழந்தையின் கழுத்திலுள்ள சங்கிலியைக் கொண்டுவந்து ஒருவன் விற்பானுகில் அவ் விவரங்களை யறிந்தோர் அச் சங்கிலியை வாங்க முன்வர மாட்டார்கள். விலையைப்பற்றிய விஷயம் மறைந்து அது தர்மமா, அதர்மமா என்ற கேள்வி எழுகின்றது. இது தர்மத்தின் பாற்பட்ட மதிப்பாகும். குழந்தையின் கழுத்துச் சங்கிலியுடன் கொலைப் பாதகமும் பின்னப்பட்டிருப்பதுபோல் தினசரி நாங்கள் கடையிற்பெறும் ஒவ்வொரு பண்டத்துடனும், நல்லதோ கெட்டதோ ஒரு பண்பு சேர்ந்திருக்கின்றது. வியாபாரி தனது பண்டத்துடன் தனது கர்மத்தின் பலனையுஞ்சேர்த்துவிற்றுவிடுகின்றான். ஆகவே, நாம்ஒரு பொருளைப் பணங்கொடுத்து வாங்கும்போது அதன் வரலாற்றையும் அறிவது அவசியம்.

பிரிட்டன் மூலப் பொருள்களை இந்தியாவிலிருந்து பெறுகின்றது. இவையனைத்தும் இங்கிலாந்திலுள்ள யந்திர அரக்கர்களுக்கு உணவாகின்றன. இதுகாரணமாகப் பிரிட்டன் இந்தியாவை அடிமைத் தளைகளினின்றும் அகற்ற விரும்பாது. இம் மூலப் பொருள்களைப் பிரிட்டனுக்கு அனுப்பும் விஷயத்தில் நாங்களும் அவர்களுடன் ஒத்துழைப்போமாகில் நாமும் பலாத்காரத்துக்குத் துணை புரிபவர்களாகின்றோம்.

மிலான் என்ற இடத்தில் அதிகமான சப்பாத்துக்கள் செய்யப்பட்டன. பிறநாட்டாரின் தேவைகளைக் கணித்து இவை ஆக்கப்பெறவில்லை. தோல் கிடைத்த மட்டும் சப்பாத்துக்களைத் தைத்தனர். இவற்றை விற்றுப்பணந் தேடுவதற்காக அபிசீனியா மக்களைச் சீர் திருத்தஞ் செய்யப்போவதாக முற்பட்டனர். அபிசீனியர்கள் சப்பாத்து அணியாதபடியால் அவர்கள் நாகரீகமற்றவர்களெனக் கூறி அவர்கள் நாட்டில் சகல சப்பாத்துக்களையுந் திணித்தனர். அணிய மறுத்தோரைப் பலாத்காரத்தாற் பணியச் செய்தனர். பணிந்த அபிசீனியர் சப்பாத்தையணிந்து எவ்வித சீர்திருத்தத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதை இன்றும் நாம் காண்கிறோம்.

வியாபார நோக்கத்தைக் கொண்டு யுத்தங்கள் ஏற்படுவதாகில் அவ் வியாபாரம் விருத்திபெறத் துணைபுரியும் நாங்களும் பாவிகளாகின்றோம். அணுக்குண்டு பிரயோகம்போன்ற அக்கிரம வேலைகளுக்கும் நாம் பொறுப்பாளிகளாகின்றோம். அந்நியப் பொருள் இங்கு வரும்போது எங்கள் நாட்டு மூலப் பொருள்களும் நம்மை விட்டுப் பிறதேசங்களுக்கு ஓடுகின்றன. வெள்ளையரைக் குறை கூறுவதிற் பயனில்லை. எங்கள் பிழைகளை நாங்கள் உணர வேண்டும். நாங்கள் கையாளும் ஒவ்வொரு விஷயமும் தர்மத்தையடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஆடுகளைத் தின்று சதை வைக்கும் புலிகளாக நாங்களிருக்கக்கூடாது. செல்வத்தைத் தேடும் விஷயத்தில் மக்களுக்குத் தீங்குண்டாக்கும் வழிகளை நாடுதல் அக்கிரமமாகும். கள்ளுக்கடை வைத்துப் பணந்திரட்டி மக்களையுங் குட்டிச் சுவராக்காமற் கருப்பணி மூலம் சர்க்கரை உண்டாக்கி நாட்டின் செல்வ வளத்துக்கு உதவி செய்யலாம். சொந்த நாட்டுப் பொருளைக்கொண்டு சிறிய வியாபாரத்தை நடாத்தினுலும் அதனுல் நாடு நன்மையுறும். அந்நிய வியாபாரத்தை ஆதரிப்பதினுலேயே நாங்கள் இன்று தரித்திரர்களாக வாடுகின்றோம்.

●

**ஐரோப்பாவிலே** தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்திற் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட யந்திரங்களும் பணமும் சிலரிடஞ் சென்றடைந்தன. ஐரோப்பாவிலிருந்து துரத்தப்பெற்ற பல நுண்ணறிவாளர் இங்கிலாந்திலே தஞ்சம் புகுந்தனர். அந்தக் காலத்திலே இவர்களுடைய மூளைப்பலத்தை உபயோகித்துக் கொள்வதற்கு இங்கிலாந்திற் போதிய பணமிருக்கவில்லை. ஆனுல் ஏகாதிபத்தியத் தாசர்களான பல பிரித்தானியரின் திறமையாற் கங்கைக் கரையின் தங்க வெள்ளம் தேம்ஸ் நதியிற் கரை புரண்டது, பணத்தின் சக்தி சேர்ந்த ஆட்சி ஏற்படவே அத்தோடு பலமுஞ் சேர்ந்து கொண்டது. இது நாளடைவில் ஏகாதிபத்தியமாக மாறியது. ஏகாதிபத்தியத்துடன் பலாத்காரமும் சேர்ந்துவிட்டது. பலாத்காரத்தை அஸ்திபாரமாகக் கொண்டே ஏகாதிபத்தியக்கோட்டைஎழுப்பப்படுகின்றது. இதற்கு உயிர் அகில உலக வியாபாரம். இதை ஒரு கதை மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

ஒருவர் கடை யொன்றுட் புகுந்து அங்குள்ள பொருள்களைப் பார்வையிட்டார். விற்பனையாளன் அவரை நமஸ்கரித்துத் தனது வியாபார தந்திரங்களைக் கையாள முயன்றான். சென்றவர் ஒன்றுக்கும் மசியவில்லை. ஈற்றில் அவன் ஒரு சீப்பையெடுத்து அவரிடங் கொடுத்து அதன் சிறப்பைக் கூறிவிட்டு அதைப் பணங்கொடுத்து வாங்கும்படி வற்புறுத்தினுன். அதற்கு அவர் தலையிலிருந்த தொப்பியை எடுத்துவிட்டுத் தனது வழுக்கையைக் காட்டித் தனக்குச் சீப்பு வேண்டியதில்லை யெனத் தெரிவித்தார். அதற்காகத்தான் இச் சீப்பைப் பெறும்படி தங்களைக் கேட்கின்றேன். தினமும் இச் சீப்பால் தலையைத் தடவினுல் மயிர் முளைத்துவிடுமென அவன் கூறினுன். எனக்கோ மயிர் வேண்டியதில்லை என்றுர் கடைக்குட் புகுந்தவர். விற்பனையாளனுக்குக்கோபம்பொங்கிக்கொண்டு வந்தது உடனே அவன் துப்பாக்கியை எடுத்து அவருக்கு நீட்டினுன். 'இச் சீப்பை நீர் வாங்க வேண்டும்; தவறினுல் துப்பாக்கிக்கு இரையாக வேண்டுமென இரைந்தான்......இன்றைய உலகத்தில் இவ்விதமான சம்பவங்கள் தான் நிகழ்கின்றன. துப்பாக்கியின் இடத்தை இப்போது அணுக்குண்டு ஏற்றிருக்கின்றது. பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் போன்ற தேசங்கள் அனைத்தும் யந்திரத்துக்கு அடிமைகளாகிவிட்டன. பிறரின் உணர்ச்சிகளைப் பொருட்படுத்திக் கண்ணியமாக நடந்துகொள்வதே நாகரீகமென்பது. பொருட்பெருக்கம் நாகரீகமல்ல. உள்ளப் பண்பே இன்று வேண்டப்படுவது. அணுக்குண்டை அமெரிக்கா பிரயோகித்தபோது அதற்கு ஆத்மீக பலம் அறவே யிருக்கவில்லை. மிருக உணர்ச்சியே அமெரிக்காவை அணுக்குண்டைப் போடும்படி தூண்டியது.

தொழிற் புரட்சி ஏற்பட முன்னர் பிரித்தானியர் மனுத்தன்மையாக நடந்துகொண்டனர். இன்று யந்திர அரக்கனுக்கு அடிமைப்பட்டிருப்பதால், உள்ளப்பண்பை இழந்துவிட்டது. ஆத்மீகபலம் அணுவளவு மில்லை

ஒரு நிலைப்பட்ட தொழில்களையும் பாரிய தொழிற்சாலைகளையும் நாங்கள் ஏற்படுத்தக் கூடாது. சுகபோகங்களை யனுபவிப்பது தான் வாழ்க்கையின் நோக்கமாக விருக்கக் கூடாது. பொருள் பெருகப் பெருக அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஊக்கமும் அதிகம் ஏற்படும். தொழில் செய்வதன்மூலம் ஒருவன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளுகின்றுன். இது முற்போக்கடையும் ஒரு தன்மை. உடம்புக்கு உணவு வேண்டப்படுவது போல மனிதனுக்கும் தொழில் அவசியமாகின்றது. உணவு ஒருவனின் நாயகத்தன்மையைத் தோற்றுவித்து அழகுணர்ச்சியையும் ஊட்டுவது போலத் தொழிலும் ஒருவனின் உள்ளத்தை மலரச் செய்கின்றது.

வார்தா கல்வித் திட்டத்தின் படி ஒரு மாணவன் ஒரு தொழிலைப் பின்பற்றவும், அத்தொழிலின் மூலம் குணவிருத்தி பெறவும் ஏதுவாகின்றது.

வேலை செய்யாது சும்மா இருந்து சுகமனுபவிக்க மனிதன் விரும்புகின்றுன். பிற உதவியைநாடிப் பயன்பெற முயலுகின்றுன். இது காரணமாகவே உலகில் இவ்வளவு தொந்தரவுகளு மேற்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்துக் கடைவீதிகளை ஒருமுறை சுற்றிப்பார்த்தால் எவ்வளவு தூரம் நாங்கள் வேலை செய்யாது பயன்பெற விரும்புகின்றேமென்பது விளங்கும். அமெரிக்காவிலிருந்து நூலைப் பெற்று யாழ்ப்பாணத்திலுள்ள கைத்தறிகள் மூலம் நெசவு செய்கின்றேம். இக் கைத்தறிகள் இங்கு இருப்பதாகக் கருதுவது தவறு. இவை அமெரிக்காவில் இருக்கின்றனவென்பதை உணர்ந்துகொள்ளுங்கள். அமெரிக்க நூல் விலையாவதற்கு இக் கைத்தறிகள் உதவிசெய்கின்றன. நாளைக்கு நீங்கள் அந்த அமெரிக்க நூலை வாங்க மறுப்பீர்களானுல் அவர்கள் உங்கள் மீது அணுக்குண்டைப் பிரயோகிப்பார்கள். பிழை எங்களைச் சார்ந்தது. பிறநாட்டு வியாபாரத் தொடர்புகளை வேரறுக்க வேண்டும். மூலப்பொருள் எங்களிட மில்லாமையால் நாங்கள் அந்நியரை வெற்றிலை வைத்து அழைக்கின்றேம். எங்கள் வேலையைச் செய்து தரும்படி அவர்களைக் கேட்கின்றேம். மூலப்பொருள்களை நாங்கள் உற்பத்தி செய்யும்போது நாங்கள் உள்நாட்டில் உள்ளவர்களுக்கு வேலை காட்டுபவர்களாகின்றேம். மூலப் பொருள்கள் எங்கள் பிறப்புரிமை. ஒருவாய் கஞ்சிக்காக எமது பிறப்புரிமையை விற்கக் கூடாது.

# குடிசைத்தொழிலின் மகத்துவம்

**யாழ்ப்பாணம்**—காரைநகர் கிராமப் புனருத்தாரண சங்கத்தின் அழைப்பையேற்று இங்குவந்த டொக்டர் குமரப்பா அவர்கள் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர். யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலும், சாவகச்சேரியிலும், உடுவில் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், மயிலிட்டி தெற்கிலுள்ள ஸ்ரீ நா. பொன்னையா அவர்களின் தோட்டத்திலும், ஸ்ரீ குமரப்பா நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சாரம்இங்கு தரப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் வந்த பேராசிரியர், கிராமக் கைத்தொழிற் சங்கம் ஒன்றினை ஆரம்பித்து வைத்து அதன் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையுங் கூறிவிட்டுச் சென்றுள்ளார். இதனை வளர்ச்சியுறச் செய்வது கிராம இயக்கத்திலும் சுதந்தரத்திலும் ஆர்வமுள்ள அன்பர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

குடிசைத் தொழில் சிறப்புவாய்ந்தது. வேலையும் ஓய்வும் இதனுடன் இணைந்திருக்கின்றன. உடலும் உயிரும்போல வேலையும் ஓய்வும் பின்னப்பட்டிருக்கவேண்டும். ஆத்மிகப் பலமும் மனித உணர்ச்சியுமிருக்குமானுல் மிருக பலம் என்ற பேச்சுக்கே இடமிராது. அந்நிய பொருள்களை வாங்கும்போது நாங்கள் எங்கள் நாட்டின் செலவு நிலையைச் சீர்குலைக்கின்றேம். விதேசிப் பொருள்களை வாங்காதீர்கள். உங்கள் மூலப் பொருள்களையும் அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யாதீர்கள். "வெள்ளையனே வெளியேறு" என்று கூக்குரல் இடுகின்றேம். அவர்களை நாங்களே இங்கு வரும்படி அழைக்கின்றேம். விதேசிப் பொருள்களை விலை கொடுத்துப் பெறும்போது வெள்ளையரையும் இங்கும் இருக்கும்படி கேட்கின்றேம். வெள்ளையரை வெளியேற்ற விரும்பினுற் சுதேசிப் பொருள்களை நாங்கள் ஆதரிக்க வேண்டும். தொழில் மூலம் நாங்கள் எங்கள் நாட்டை எங்களுக்கே உரிமையாக்க வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே தேட வேண்டும். பின்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டுக்குவேண்டிய சகலபொருள்களையுந் தேடிக்கொள்ளலாம். இப் பணியில் ஈடுபடுவோமாகில் சுதந்திரம் எங்களையே தேடிவரும்.

இலங்கையில் ஐக்கிய இயக்கம் என்ற பேச்சுப் பிரமாதமாக விருக்கின்றது. இதைப்பற்றி அறிந்துகொள்வதற்காக ஒரு ஐக்கிய சங்கக்கடைக்குச் சென்றேன். அங்கு அந்நிய நாட்டுப் பொருள்கள் அதிகமாகவிருப்பதைக் கண்டேன். அமெரிக்காவிற் செய்யப்பெற்ற உணவுப் பொருள் பல ரகமான புட்டிகளிற் காட்சி கொடுக்கின்றன. இது ஐக்கிய இயக்கமாகாது. பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் ஐக்கியமாக உழைத்து அவர்களின் பொருள்களை நாட்டு மக்களுககு விலைப்படுத்துவதா, ஐக்கிய இயக்கம் ? உண்மையாகவே இப்போது வேண்டப்படுவது ஒத்துழையாமையே.

**தேவை**

அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர் (Compositors) தேவை. 30-3-46க்கு முன் மனுச்செய்க.

மனேஜர்
திருமகள் அழுத்தகம்
சுன்னுகம்.

# சுதந்திரம் பெற வழி

## 'ஈழகேசரி'க்கு ஸ்ரீ குமரப்பா செய்தி

**பேராசிரியர் ஸ்ரீ குமரப்பா கடந்த வியாழனன்று கொழும்புக்குப் பிரயாணமானுர். அங்கிருந்து மதுரைக்குச் சென்றிருக்கின்றுர். டொக்டர் அவர்கள் ஈழகேசரி வாயிலாக இலங்கை மக்களுக்கு விடுத்திருக்கும் விசேஷ செய்தி அடிமை வாழ்வின் இழிவைக் காட்டிச் சுதந்திரத் தாகத்தை யூட்டுகின்றது.**

**ஈழமணித் திருநாடானது** சுற்றிவர முற்றிக்கையிடப்பட்டிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. வலிமைமிகுந்த ஒரு பலசாலியின் கையையும் காலையும் விலங்கிட்டுக் கண்களை மூடிக்கட்டி, வாய்ப்பூட்டிடுவது போல் இலங்கையும் அடிமைத் தளைகளால் இறுக்கப்பட்டிருக்கின்றது. திருடன் ஒருவன் உள்ளே புகுந்து அகப்படுபவையனைத்தையும் அள்ளிக்கொண்டு போய்விடலாம். இதைக் கேட்க இங்கு ஒருவருமில்லை. எவன் இலங்கையைச் சுரண்ட விரும்பினுலும் அப்படிச் செய்து கொள்ளலாம். நாடு அவன் காலடியில் மண்டியிட்டு வாய்புதைத்து நிற்க எப்போதுந் தயார். இலங்கை வளஞ்செறிந்த ஒரு நாடு. இங்குள்ள மக்கள் ஊக்கமும் உழைப்பும் மிகுந்தவர்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்தவர்கள் இன்று உண்ண உணவுக்கும் உடுக்கத் துணிக்கும் பிறர்கையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அந்நிய நாடுகள்தான் இவர்களுக்கு உயிர். இப் பரிதாபமான நிலை ஒருபோதும் ஏற்படக்கூடாது. அந்நியநாட்டு யுத்தக் கப்பல் ஒன்று கொழும்பில் நின்றவண்ணம் இலங்கைமக்கள் அத்தனை பேரையும் பட்டினி போடலாம். ஆகவே நாடு ஒரு பேச்சு மூச்சின்றி அடிபணிந்துவிடும். இதை யார்தான் பார்த்துச் சகிக்க முடியும்? எமது ஆதிக்கத்தைச் செலுத்த விரும்பினுல் முதலாவதாக நாங்கள் எங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய மூலாதார தேவைகளை நாங்களே தேடிக்கொள்ள வேண்டும். பணமே பெரிதென நினைத்து அதன்பின்னுற் குடல்தெறிக்க ஓடுகின்றேம். அதனுடைய மாய வலைக்குள் சிக்குண்டு திக்குமுக்குப்படுகின்றேம். புகையிலைச் செய்கையும், றப்பர்த் தோட்டங்களும் கள்ளுக்கடைகளும் நாட்டுக்கு விமோசனம் அளிக்க முடியவே முடியாது. இவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பருத்தியை விருத்தி செய்ய வேண்டும். உருளைக்கிழங்கை அதிகமாக உண்டாக்க வேண்டும். கரும்புச் செய்கையைப் பெருக்க வேண்டும். இவைதான் நாட்டுக்கு நலன் விளைப்பன. எமது பொருளாதார நிலை சீர்பெற்றுச் செம்மையுற வேண்டும். செல்வ நிலை ஸ்திரம் பெறுமாகில் நாட்டிற் சுயமரியாதையாகவுங் கௌரவமாகவும் வாழலாம். அப்படியானுற் சுதந்திர தேவியின் அருளையும் பெறலாம்.

ஒப். ஜே. ஸி. குமரப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ☼

● சென்ற வாரம் போற்றுதற்குரிய வீரர்களில் மகாத்மா ஒருவரே சீவந்தராயிருக்கும்போது போற்றப்படுகின்றாரெனக் குறிப்பிடப்பட்டது.

☼ அப்படியல்ல, இன்னொருவரும் அவரின் பக்த கோஷ்டியினராற் போற்றப்படுகின்றனராம். இவரையும் கடவுளின் அவதாரம் என முஸ்லீம்களின் ஒரு சாராராகிய இஸ்மாயிலிஸ் (கோஜிய முஸ்லீங்கள்) கருதுகின்றனராம்.

☼ இவர்தான் உலகத்தின் உயர்தரக் குதிரைப் பந்தய வீரரும், தமக்கெனச் சொந்தமாக இராச்சியமில்லாத அரசிளங் குமாரருமாகிய மேன்மைதங்கிய அகா கான் ஆவர்.

☼ இவருக்கு இந்தியாவிலும், ஏனைய உலகிலும் — பெரும்பாலும் மத்திய கீழைத் தேசத்திலும், ஸான்சிபாரிலும் — ஒரு கோடிபக்தர்களிருக்கின்றனராம்.

☼ பக்த கோஷ்டியினரின் காணிக்கைகளைக் கொண்டும் பந்தயக் குதிரைகளினாலும் இவர் உலகத்திலுள்ள 5 பெரும் பணக்காரர்களுள் ஒருவராயிருக்கின்றனராம்.

☼ இருவாரங்களின் முன்னதாக இவரின் வைர விழா கொண்டாடப்பட்டபோது இவரின் நிறைக்குச்சமமான வைரங்கள் இவரது பக்தர்களால் இவருக்கு அளிக்கப்பட்டனவாம்.

☼ நேருஜீயையும் பொன்னினாலும், வெள்ளியினாலும் நிறுப்பதற்கு ஜான்சி காங்கிரஸ் நிர்வாக சபையினர் விரும்பினராம். அகாகானுடன் தம்மாற் போட்டிபோட முடியாதெனக் கூறி இவர் இதனை மறுத்து விட்டாராம்.

● இம்மாதிரியானவீரர்களைப் பற்றிக் கூறும்போது போலி வீரர்களைப்பற்றியும் இரண்டொரு வார்த்தை கூறாது விடுதல் பாதகமாகுமாம்.

☼ இவர்களைப் பற்றித் தேசிய கவி பாரதியார் இடித்திடித்துக் கூறியிருப்பதைச் சும்மா வாசித்தாலே போதுமாம்.

☼ இவ் 'வாய்ச்சொல்லில் வீரர்'களைப் பாரதநாட்டில் மாத்திரமல்ல எல்லா நாடுகளிலும்காணலாமாம்.

☼ எமது இச்சிறிய தீவிலே, 'கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்திற் கொள்ளாத' வீரர்கள் பெருகிக்கொண்டிருக்கிறார்களாம்.

☼ இவர்களது பித்தலாட்டங்களுக்கு மூக்கிய காரணம் சுயநலம் என்ற ஒரு புதைபொருள்தானாம்.

☼ இப்புதைபொருளைத் தோண்டி எடுப்பது மிக மிகக் கஷ்டமாம். அதை எடுத்துக்காட்டும் வரையும் இவர்கள் சூரப் புலிகளாகவே இருப்பார்களாம்.

☼ பசுத்தோல் போர்த்துத் திரியும் இப்புலிகள் நல்ல நீர் நிலைகளைத் தேடித்திரிகின்றனவாம்.

● தேர்தற் கணகணப்பு இப்பொழுதே இந்நாடெங்கும் பரவ ஆரம்பித்துவிட்டதாம்.

☼ தலைவர்கள் என்று சொல்லிக்கொள்வோர் தங்களைக் காட்டிக்கொள்ள வெளிக்கிளம்புகின்றனராம்.

☼ கூட்டங்கள் கூட்டுபவர்களும், விழாக்கள் கொண்டாடுபவர்களும் பிரசாரகர்களுக்காக வலை வீச இனிமேல் ஏற்படாவாம்.

☼ தமது சொந்தச் செலவிலேயே சமுகங் கொடுத்துப் பிரசாரஞ் செய்யவும், இன்னும் பல உதவிகளைப் புரியவும் அனேகர் முன்வர இருக்கின்றனராம்.

☼ பத்து வருடங்களுக்குக் குறையாது தத்தம் ஸ்தானங்களை இறுகப்பிடித்து நின்ற அரசாங்க சபைப் பிரதிநிதிகளும் தமதிருக்கைவிட்டு மக்களுக்குத் தரிசனங் கொடுக்க வெளிக் கிளம்பியுள்ளார்களாம்.

☼ சோழியன் குடுமி சும்மா ஆடா தென்பதையும் மக்கள் மனத்திற்கொள்ள வேண்டுமாம்.


# GOOD NEWS

**BOOKS FOR SCHOOLS**

Systematic Qualitative Analysis by Caven ... Rs. 5/95
Notter & Firth's Hygiene-New & Revised Edition Rs. 11/25
Collin's Popular Dictionary - New Clear Type Edition ... Rs .4/25
Biology for Medical Students by Hentschel & Cook ... Rs. 16/80
Text-book of Botany by Lowson & Sahni ... Rs. 8/50
A Class book of Botany by Dutta ... Rs. 8/25

**SANMUGANATHANS' MISCELLANY**

English Social History-Chaucer to Victoria by Trevelyan ... ... Rs. 17/—
Parliament - Jennings ... ... Rs. 20/—
The Constitutional Problems in India by Coupland ... ... Rs. 11/—
Evolution of England by Williamson ... Rs. 11/25
Foot Prints on the sands of Time by Pearce ... Rs. 2/75
Netaji Bose - a Life sketch with attractive illustrations ... Rs. 4/—
Prison Days - Vijaya Lakshmi Pandit ... Rs. 4/30

**The Empire at work series :**

Our letters in the Post -/90
Rubber and its many uses -/90
Cocoa and Chocolate -/90
The arm of Law 1/15
The Story of Gold -/90
The Story of Transport -/90

Studies in Tamil Literature and history by Ramachandra Dikshitar ... Rs. 6/-

**An Excellent Range of New Books JUST RECEIVED**

*CHOICE is entirely YOURS. A visit will convince you.*

**S. S. Sanmuganathan & Sons**
PUBLISHERS & BOOK SELLERS
VANNARPONNAI :: JAFFNA.

[ 2659 ]



# புகையிலை

**புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்**

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

**புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்**

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

**கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்**
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD.**
Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2653]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரக் காப்பிய இலக்கணம்

பண்டிதமணி
**மு. கதிரேசச் செட்டியார்**

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டு அரசர் குடியிற் பிறந்த இளங்கோவடிகள் என்னும் புலவர் பெருமான் இயற்றியது. அவர் இக்காப்பியத்தைப் பாடுதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே இவ் வரலாற்றுத் தலைவனும் தலைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பார் வாழ்க்கை முடிவடைந்தது. அவர்கள் காவிரிப்பூம் பட்டினத்துப் பிறந்து மதுரைக்கு வந்ததும், சிலம்பு காரணமாகக் கோவலன் மடிந்ததும், அதுபொருத கண்ணகி சேரநாடு சென்று விண்ணுலகம் சென்றதும் ஆகிய இந்நிகழ்ச்சிகளை நேரிற் கண்டவர் சங்கப் புலவருள் ஒருவராகிய தண்டமிழாசான் சாத்தனார் என்பார். அவர் இளங்கோவடிகளுக்கு அறிவிக்கக்கேட்ட அவ்வடிகள் சிறந்த சுவைகளுக்கு நிலைக்களமாக இவ்வரலாறு அமைந்தமையால் இதனை ஒருபெருங் காப்பியமாகப் பாடி முடித்தனர். இக் காப்பியத்திற்கு மணிமேகலை என்பது போல வரலாற்றுத் தலைவியாகிய கண்ணகியின் பெயரைக் குறித்திருக்கலாம். அப்படிப் பெயரிடாமற் சிலப்பதிகாரம் என்று பெயர் அமைத்ததற்குச் சிறந்த காரணமுண்டு. பெரிய கவிகள் தாம் பாடும் காப்பிய வரலாற்றுள் மிகச் சுவைபயந்து நிற்கும் வரலாற்றுப் பகுதியொன்றையொட்டி அக் காப்பியத்திற்குப் பெயரிடுவதுண்டு. வடமொழியில் சூத்திரகன் என்னும் புலவர் தாம் இயற்றிய நாடகம் ஒன்றிற்கு "மிருச்சகடிகம்" என்று பெயரிட்டனர். மிருச்சகடிகம் என்பது மண்ணாலாகிய சிறுவண்டி என்னும் பொருளுடையதாகும். இந் நாடக வரலாற்றுத் தலைவர்களாகிய வசந்தசேனை சாருதத்தன் இவருள் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டிருக்கலாம். அப்படியில்லாமல், அவ் வரலாற்றிற் சுவைமிக்க நிகழ்ச்சியொன்றைக் காரணமாகக்கொண்டு 'மண்வண்டி' என்று பெயரிட்டனர். அதுபோலக் கண்ணகி காற்சிலம்பு காரணமாகவே, கோவலனும் கண்ணகியும் மதுரை போந்ததும், கோவலன் வெட்டுண்டு இறந்ததும், பாண்டியன் நெடுஞ்செழியன் நீதி பிழைத்தது பொருது உயிர் நீங்கியதும், அது தெரிந்து அவன் பட்டத்தரசியாகிய கோப்பெருந் தேவி மாண்டதும், மதுரை எரியுண்டதும், கணணகி சேரநாடு போந்து விட்புலஞ் சென்றதும் ஆகிய இவையெல்லாம் நிகழ்ந்தன. ஆதலால் இக்காப்பியத்திற்குச் சிலம்பு—அதிகாரம் சிலப்பதிகாரம் என்று பெயரிடப்பட்டது. இக் காப்பியத்திற்கும் மூன்று என்னும் எண்ணிற்கும் பொருத்தமான தொடர்புண்டு என்று கண்ட ஆசிரியர் இக் காப்பியத்தைப் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என முக்கூறுபடுத்து முடித்தனர். தமிழ் மொழியிலுள்ள இயல், இசை, நாடகம், என்னும் மூன்று பகுதிகளும் இதன்கண் விரவி வரப் பாடினர்.

சோழர், பாண்டியர், சேரர் என்னும் மூன்று தமிழ்ப்பெரு மன்னர்களையும், அவர் தம் மூன்று நாடுகளையும் சிறப்பித்துள்ளார். இக் காப்பியம் நுதலிய பொருளும் மூன்றெனக் கண்டனர். அவை:—

"அரசியல் பிழைத்தோர்க்கு
அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு
உயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந்
தூட்டும் என்பதூஉம்"

ஆம், இம் மூன்று பொருளையும் தன்னகத்தடக்கிச் சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் என்றபடி இச் சிலப்பதிகாரம் பாடி முடிக்கப்பட்டது. காப்பியங்களிற் காணப்படும் சுவைகள் ஒன்பது வகையாகும். அவற்றுள் பெருங் காப்பியங்களுள் மிகுதியாகவும், சிறப்பாகவும் காணப்படுவன மூன்று. அவை:—

உவகை, அவலம், பெருமிதம் என்பனவாம். இவற்றை முறையே சிருங்காரம், சோகம், வீரம் என்று வடநூலார் கூறுவர். இம் மூன்றனுள் ஒன்றேனும் விரவாத காப்பியம் சுவையுணர்ச்சி யுடையார்க்கு விருந்தாக மாட்டாது. ஏனைய சுவைகளெல்லாம் சிறு வரவினவாகவும், இம் மூன்றனுள் ஒன்று அல்லது மூன்றும் பெரு வரவினவாகவும் தோன்றவைத்துச் செய்யப்பட்ட காப்பியங்களே கற்பார் உள்ளத்தைக் கவரும் இயல்பினவாகும். இவ்வுண்மையுணர்ந்த இளங்கோவடிகள் எல்லாச் சுவைகளுக்கும் இக் காப்பியத்தை நிலைக்களமாகப் பாடினார். ஆயினும், சிறப்பாக மேற்குறிப்பிட்ட உவகை முதலிய மூன்றனையும் முறையே மூன்று காண்டங்களினும் தோன்ற வைத்தார். முதலாவதாகிய புகார்க் காண்டத்தில் கண்ணகி திருமணம், மாதவியின் ஆடல் பாடல், இந்திர விழவு, கடலாடல் முதலிய இன்பப் பகுதிகளே பெரும்பாலும் கூறப்பட்டுள்ளன. கோவலன்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே."

என்று கண்ணகியின் நலத்தைப் பாராட்டி,

"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா
லெனவொருவர்
காமர் மனைவியெனக் கைகலந்து—
நாமந்
தொலையாத இன்பமெலாந்
துன்னினர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று."

என்றபடி ஐம்புலனும் ஆரத்துய்த்த செய்திகள் இப் புகார்க் காண்டத்தில் உள்ளன. மேலும் ஆடலும், பாடலும், அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்றுங் குறைபடாத மாதவியென்னும் ஆடல் மடந்தையின் இனிய யாழிசையும் மிடற்றுப் பாடலும் அபிநயக் கூத்தும் கோவலன் அக் கணிகையொடு மருவி இன்பநுகர்ந்த செய்திகளும் அக் காண்டத்திலேயே உள்ளன. ஆதலின் அக் காண்டத்தில் விஞ்சி நிற்கும் சுவை சிருங்கார ரசம் எனப்படும் உவகையேயாகும். இரண்டாவதாகிய மதுரைக் காண்டத்தில் முழுதும் அவலச்சுவையே விரவி நிற்பது அறியலாம். கண்ணகியை மணஞ்செய்து கொண்டபோது அவள் நலத்தைப் பாராட்டியதாக முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப் பாராட்டில் கோவலன் தன் ஐம்புலன் நுகர்ச்சிக்கும் அவள் இனியளாய நிலையைக் கருதிக் கூறியதாக அறிகின்றோம். மேலும் ஆங்கு,

"அரும்பெறற் பாவாய் ஆருயிர்
மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட
மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்
கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே!
யென்கோ
யாழிடைப் பிறவா இசையே
யென்கோ
தாழிருங் கூந்தல் தையால்."

என்று பாராட்டியதையும் அறிகின்றோம். அங்ஙனம் பாராட்டியவெல்லாம் அவள் இளமையும், அழகும் தனக்கு ஒத்தனவாகக் கண்டு காதற் சுவையில் ஈடுபட்ட நிலையிலேயே யாம். இன்பத் துறையில் முழுகிக்கிடந்த அந்நிலையில் சிறந்த பல நற்குணங்களுக்கும் நிலையமாக விளங்கிய கண்ணகியின் காட்சி அப்பொழுது அவனுக்கு அவ்வாறு புலப்பட்டது. பின்னர் மதுரையில் மாதரி என்னும் ஆயர்குலச் செல்வியின் இல்லத்தில் கண்ணகியை வைத்துவிட்டு, அவள் காற்சிலம்பில் ஒன்றை எடுத்துக்கொண்டு அக நகர்க்குப் புறப்படும் பொழுது, பிரிவாற்றாத நிலையில் அக் கற்பரசியின் காட்சியை எவ்வாறு அநுபவித்தான் என்பதை ஆசிரியர் உளங்கரைந்து பாடியுள்ளார். அக் காட்சியே அவ் வுத்தம மணமக்களின் இறுதிக் காட்சி என்பதையும், மீண்டும் இவர்களுடைய இனிய சந்திப்பு நிகழாது என்பதையும், சிறந்து உயர்ந்த முறையில் வாழ்ந்த இவர்களுக்குக் கொடிய தீவினைப் பயன் விளையுங் காலம் நெருங்கியிருப்பதையும் நூலாசிரியர் அறிந்தவராதலின் அத் துன்பத்தில் உள்ளங்கன்றிக் கோவலன் வாய்மொழியாகப் பாடிய பாடற்பகுதிகள் பின் வருவன:—

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை
யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமு மடனும் நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்திங் கென்றுயர்
களைந்த
பொன்னே கொடியே புனைபூங்
கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின்
செல்வி
சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டி
யான் போய்
மாறிவருவன் மயங்காதொழிகென."

இங்கே கோவலன் கண்ட காட்சிக்கு, கண்ணகியினுடைய சிறந்த குணஞ் செயல்களின் வடிவங்களே புலனாயின. பெண்களை வெளியூர்களுக்கு ஆடவர் கூட்டிச் சென்றால், அப் பெண்பாலாரைப் பேணும் பொறுப்பு ஆண்மக்களுடையதாகும். கண்ணகி வழிநடந்து செல்லுங்கால், வெப்பத்தால் தன் கால் கொப்புளங் கொண்டது அறிந்து இத் துன்பத்தை இன்னுயிர்க் கணவர் எய்துவரே என்று கணவன் நிமித்தம் இரங்கிப் பரிகரிக்க முயன்றாளேயன்றித் தனக்குத் துன்பமாக எண்ணினாள் அல்லளாம். இக்குணநலத்தை யுட்கொண்டே,

"தன் துயர் காணாத் தகைசால் பூங்
கொடி"

என்று கவுந்தியடிகளும்,

"என்னொடு போந்து ஈங்குஎன்
துயர்களைந்த
பொன்னே கொடியே."

என்று கோவலனும் பாராட்டுவாராயினர். பொன்னே, கொடியே என்பது முதலியன வெறும் அடுக்கு மொழிகளல்ல. சுடச் சுடப் பொன் ஒளி மிகல் போல இல்லத்தில் இனிதிருந்த இன்ப நிலையினும் காட்டில் வெப்பத்தில் நடந்து செல்லும் துன்பநிலையில் கண்ணகியின் உயர் குணம் மிகுதியாக விளங்கியது அறிந்து பொன்னே யென்றானும். இங்ஙனமே அம்மொழிகளெல்லாம் கருத்துடையன வென்பது உய்த்துணர்வார்க்குப் புலனாகும், இங்ஙனம் என்றும் இல்லாத முறையில் மனங்குழைந்து பாராட்டிப் பிரிந்த கோவலன் ஊழ்வலியால் கள்வனாகக் கருதப்பட்டு எதிர்பாராதநிலையிற் கொலைப்பட்டு இறந்ததும் கண்ணகியின் அடங்காத் துயர் நிலையும் படிப்பவர் உள்ளத்தை உருக்கும் இயல்பினவாம். கோவலன் இறப்பைக் கேட்டவுடன் கண்ணகிக்கு நிகழ்ந்த பதைப்பை ஆசிரியர் நெஞ்சம் பதைத்துப் பாடியுள்ளார். காலைப் பொழுதில் கண்ணகியை விட்டுப் பிரியுங்கால் கோவலன் தன் குடுமியிற் கட்டியிருந்த மலர்மாலையை அவள் கூந்தலிற் சேர்த்தானாக, அதனை ஏற்றுக்கொண்டு உவகையில் ஈடுபட்ட கண்ணகி மாலைப் பொழுதில் அவன் வெட்டுண்டு கிடந்த நிலையில் அவனுடலைத் [illegible] பாராததனால் நேர்ந்த கடுந் துயரத்தை மேற்கொண்டாள் என்னும் பொருள் தோன்ற,

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன்
வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்
பாற் காலைவாய்ப்
புண்தாழ் குருதி புறஞ்சோர
மாலைவாய்க்
கண்டாள் அவன் றன்னைக்
காணாக் கடுந்துயரம்."

என்று ஆசிரியர் பாடியிருப்பதும் கண்ணகி பாண்டியன் அவைக்களத்தில் வழக்குரைக்கச் சென்று நிற்கும் நிலையை,

"காவியுகுநீரும்கையிற்றனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்"

என்றும்,

"மெய்யிற் பொடியும் விரித்த
கருங்குழலும்
கையிற்றனிச்சிலம்பும் கண்ணீரும்
—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக்
காரிகைதன் சொற்செவியின்
உண்டளவே தோற்றான் உயிர்."

என்றும் அவலவுருவாகச் சித்திரித்திருப்பதும் நெஞ்சத்தை யுருக்கும் நிலையினவாம். இது பற்றியே,

"நெஞ்சை யள்ளுஞ் சிலப்பதிகார
மென்றோர் மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு".

என்று பாரதியார் பாராட்டினர். மேலும் கோவலன் இறந்துபட்டானாகக் கண்ணகி கணவனாகிய உயிர் நீங்க வெற்றுடல் போலத் தன் வயம் இழந்து சென்று, நேர்ந்த துயரத்தைப் பாண்டியன் முன்னிலையில் எடுத்துரைத்த அளவில் அரச நீதி பிழைத்த யானோ அரசன் யானே கள்வன் என்று மன்னவன் மயங்கி வீழ்ந்து உயிர் நீத்ததும் அது கண்டு அவன் மனைவியாகிய கோப் பெருந்தேவி,

"தன்னுயிர் கொண்டவனுயிர்
தேடினள் போற்
பெருங்கோப் பெண்டும்
ஒருங்குடன் மாய்ந்தனள்"

என்றபடி மரணம் எய்தியதும் மதுரை மாநகரம் எரியுண்டதும் ஆகிய வருந்தத்தக்க இவ்வெல்லா நிகழ்ச்சிகளும் மதுரைக் காண்டத்தில் உள்ளனவாதலின் அது அவலச்சுவை வடிவாகவே அமைந்தது என்று கூறலாம்.

இனி மூன்றாவதாகிய வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவன் வீரமும் ஆரிய அரசர்களாகிய கனக விசயரை அவன் போரில் வென்று அடிப்படுத்தியதும், பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. செங்குட்டுவன் வீரபத்தினியாகிய கண்ணகியார்க்குப் படிவஞ்சமைக்க இமையமலையிற் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து, கனகவிசயர் என்னும் ஆரிய அரசர் முடியிற் சுமப்பித்துத் தன் நகரத்திற்குக் கொண்டு வந்தான் என்பது வரலாறு. இந் நிகழ்ச்சியை ஆசிரியர் 'மாதவி மடந்தை, கானற் பாணி, கனக விசயர் தம் முடித் தலை நெரித்தது' என்று அழகு பெறக் கூறியுள்ளார். மாதவி கடற்கரையிற் பாடிய பாட்டுக் காரணமாகவே கோவலன் பிரிந்ததும் பின் நிகழ்ச்சிகளும் ஆயின எனக் கண்ட ஆசிரியர் இவ்வாறு கூறினர். மேலும் செங்குட்டுவன் வீரச் செயல்களைப் பற்றி இக்காண்டத்தில் சிறப்பாகப் பல இடங்களிற் காணலாம்,

"ஆரிய மன்னரீ ரைஞ்ஞூற்றுவர்க்கு
ஒரு நீ யாகிய செரு வெங்கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட்கூற்
றம்"

எனவும்,

"கோட்டு மாப்பூட்டி வாட்கோலாக
ஆளழி வாங்கியதரி திரித்த
வாளேருழவன்"

எனவும் கூறிய பகுதிகள் அஞ்சத்தக்க அவன் வீரச் செயலின் மேம்பாட்டைப் புலப்படுப்பனவாம். இவ்வாறு மூன்று காண்டங்களிலும் முறையே உவகை, அவலம், பெருமிதம் என்னும் மூன்று சுவைகளும் விஞ்சி நிற்றலை யறியலாம்,

இனி இக் காப்பியத்திற்கு, இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள், என்று ஒரு பெயருண்டு. இதன் கண் முப்பது பாடல்கள் உள்ளன. பெரும்பாலும் ஆசிரியப் பாக்களே யுள்ளன. அவையெல்லாம் இயற்றமிழ்ப் பகுதியைச் சார்ந்தவை. கானல் வரி, வேட்டுவ வரி முதலிய வரிப் பாடல்களெல்லாம் இசைத் தமிழ்ப் பகுதியைச் சார்ந்தவை. ஆய்ச்சியர் குரவை குன்றக் குரவை முதலியன நாடக வுறுப்புக்களுடைமையால், அவை நாடகத் தமிழ்ப் பகுதியைச் சார்ந்தவையாகும். அரங்கேற்று காதையிற் கூறப்பட்ட பொருள்கள் இசை நாடகங்களின் இலக்கணங்களாகும். மேலும் அலங்கார நூலிற் பெருங் காப்பிய இலக்கணமாகக் கூறப்பட்ட வெல்லாவற்றையும் இக்காப்பியம் தன்னகத்து

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## தலைவி பிரிவுத் துன்பமும் தோழி தேற்றலும்

[களவிற் புணர்ந்த தலைமகன், தலைவியின் புணர்ச்சியில் மகிழ்ந்து, பின்னோர் காரணம் பற்றி அவளைப் பிரிந்து செல்கின்றான். பிரிவுணர்ந்த தலைமகள் அப் பிரிவுத் துன்பம் தன்னைப்பீடிக்கப் பொறுக்கலாற்றாளாய், தன் உயிர்ப் பாங்கிக்கு உணர்த்தா நின்றாள். அஃதுணர்த்தவுணர்ந்த பாங்கி பிரிந்த தலைமகன் வருவானெனத் தேற்றி அவளின் பிரிவுத் துன்பத்தை நீக்குகின்றாள்]

### தலைவி பிரிவுத் துன்பம்

(குறள் வெண் செந்துறை)

1. அன்று எவனமயக்கி யன்புமுத்தந் தானீந்து
இன்று எவனப்பிரிந்தே யேகினனே காண்டோழி
2. மென்சாயல் தான்றளர்ந்து மென்வதனந் தான்வாட
இன்சொ லெனக்களித்தே யேகினனே காண்டோழி
3. மென்வாடை தான்வந்தே மெல்லாகம் புன்கூர
முன்னத் தாலுணர்த்தி முயக்கமின்றிச் சென்றனனே
4. பல்லிருள் கால்சீக்கும் பகலவனும் மறைந்தனனே
எல்லை ஒளிவளர்க்கும் எரிமதியந் தோன்றியதே
5. மெல்லுயிரைத் தான்கொள்ளும் வல்லியம னேபோன்று
அல்லும் பகலுமெனக் களவில்துன்பம் ஆகுதடி
6. உண்ண விருப்புமில்லைக் கண்ணுறக்கந் தானுமில்லை
எண்ணில் மனத்துயரம் எண்ண வடங்காதே
7. மன்மதன்றன் மலர்க்கணைதான் மார்பகத்தே பாயுதடி
என்னன்புப் பாங்கி என்செய்வேன் சொல்லேடி.

### தோழி தேற்றல்

(ஆசிரியப்பா)

நின்னல மெண்ணி நினைப்பிரிந் தவன்றான்
பொய்யுடன் புணரான் பொய்யு மவன்றனை
எய்துத லில்லை யேங்குவ தென்னோ
வாவளையேய் கண்ணிநின் வாணுதல் மேலே
வறுமை யென்ன வயங்கும் பசலை
அவன்றான்,
வாராமை யில்லை யாதலின்
நாவளையே நீங்கும் நீகண் டாயே.

—வே. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம்: பார்த்.பங்குனி கக

## இந்திய விடுதலை

சென்ற அறுபதுவருடங்களாக, இந்திய மக்கள் சுதந்திரத்தை நாடிச் செய்துள்ள தியாகமும் முயற்சியும் இன்று தான் விரும்பிய பயனை அளிக்கப்போகின்றன. மந்திரிசபையின் பிரதிநிதிகளாகும் மூன்று பெரியார் இன்று இந்தியா வந்து சேர்ந்துள்ளார். இந்தியர்க்குப் பூரண சுதந்திரம் வழங்கிச் செல்லவே இவர்கள் வந்துள்ளார். இவர்கள் இந்தியாவுக்குச் சமுகமளிப்பதை முன்னிட்டுத் தேசாளுமன்றத்தில் நடந்த விவாதமும் இதையே இலக்காகக் கொண்டுள்ளது. முன்போலன்றி இம்முறை செய்கையில் தமது வாக்குகளை நிறைவேற்றப் பிரிட்டிஷ் அரசினர் முனைந்து நிற்பது விசேஷமாகக் குறிப்பிடத் தக்கது. எதுவிதத்திலும் இந்தியாவினை மற்றைய சுதந்திரம் பெற்ற நாடுகளின் அந்தஸ்தில் வைப்பதெனப் பிரிட்டிஷ் தேசாளுமன்றம் முடிவுசெய்துவிட்டது.

இப்பொழுது இதற்குத் தடைபுரியுங் கட்சியினர் இங்கிலாந்தில் இல்லை யென்றே கூறவேண்டும். உலக யுத்தமும், தொழிற்கட்சி யரசினரும், இந்திய மக்களின் அளவு கடந்த சுதந்திர நாட்டமும் இந்தியா சுதந்திரம் பெறும் நாளை விரைந்து இட்டச் செய்தன வெனலாம். இந்தியாவில் முஸ்லீம் சங்கமும் அதன் தலைவராகும் ஜனுப் ஜின்னுவும் ஒருபோது இடறுகட்டையாக நிற்பாரோவென்று சிலர் இன்னும் சந்தேகமடைகின்றனர். ஆனல், முதன் மந்திரியார் மேஜர் அட்லி தேசாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையின்பின், இவ்விஷயமாக விசனப்படச் சிறிதும் இடமில்லையென்றே கூறலாம். சிறுபான்மைக் கட்சியினர் பெரும்பான்மையான மக்கள் சுதந்திரமடைவதை நிரந்தரமாகத் தடைசெய்து நிற்பதற்கு நாம் இடங் கொடுக்க மாட்டோம்'' என்று தெளிவாகக் கூறியுள்ளார். ஜனுப் ஜின்னுவின் முஸ்லீம் சங்கத்தையே இவர் குறிப்பிட்டாரென்பது தெற்றென விளங்கிவிட்டது. ஐக்கியமடைந்து சுதந்திரம் பெற்ற இந்திய அரசாங்கத்தில் ஜனுப் ஜின்னு சேராது வெளியேநிற்க இனி இயலாது.

அப்படியிருந்தும், பெரிய கலகம் இந்தியாவில் நிகழுமெனவும் முஸ்லீங்களுக்குப் பாக்கிஸ்தான் வழங்காவிடில் தாம் ஒத்துழைக்க வியலாதென்றும், ஜின்னு மேன்மேலும் கூக்குரலிடுகின்றார். இவர் இதுவரையும் கட்டிய கோட்டைகள் யாவும் இடிந்து தகர்ந்து அழிந்துபோயின. உலகில் இவருடைய கொள்கைகளை ஆதரிப்பாரெவரும் இல்லை. என்றாலும், தனியே நின்று குழறி மற்றையோரை வெருட்டியும் அச்சமுறுத்தியுந் தாம் நினைத்த காரியத்தை முடிக்கலாமெனப் பகற்கனவு காண்கின்றார். ; மிஸ்ரர் ஜின்னு மகாயுத்தத்தை நீடித்து நடாத்தி அபார வெற்றியை அடைந்த பிரிட்டிஷாரை இலகுவில் பயமுறுத்தலாமென இவர் எண்ணுவது எவ்வளவு புத்தியீனம். உலக நிலையையும், இந்தியாவின் நிலையையும் நோக்கிப் பிரிட்டிஷார் மிக்க ஆராய்வின் பின் செய்யும் மகத்தான கைங்கரியத்தை ஒருவர் குழப்பிவிடப் பார்ப்பது, எவ்வளவு துரோகமான செயல். இந்தியாவை இரு கூறுகப் பிரிக்கவேண்டுமென்று ஜனுப்ஜின்னுகூறுவது எக்காலத்திலும் நிகழப்போவதொன்றல்ல.

சுதந்திரம் வழங்கியன்றி, இந்தியாவின் நல்லிணக்கத்தையும், தொடர்ச்சியையும் தாம் வைத்திருக்க வியலாதென்பதைப் பிரிட்டிஷ் அரசினர் உணர்ந்துவிட்டனர். சமத்துவ உரிமையும், அதிகாரமும் பெற்ற இந்தியாவின் நட்பே வருங்காலத்தில் தமக்கு நிலையான பேருதவியாகுமென்பதை ஆங்கில மேதாவிகள் உணர்வாராயினர். இப்பொழுது சுதந்திரம் இந்தியாவுக்கு வழங்கப்படினும், இன்னுஞ் சில ஆண்டுகட்குப் பிரிட்டிஷ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றியே நிற்பார்கள். இந்தியாவின் பாதுகாப்பும், பிரிட்டிஷார் உதவியுடனேயே நிலைபெற வேண்டும். ஆனல், அரசியல் பொறுப்பு இந்திய மக்கள் கையிலேயே முற்றாகவிருக்கும். வியாபாரம், கைத்தொழில் விருத்தி, விவசாயம் என்பன இந்திய மக்களின் நன்மையை இலக்காகக் கொண்டு இந்திய அரசினரால் நடத்தப்படுவதாகும். பிரிட்டிஷார் இதுவரையும் அளவுகடந்த பலாத்காரத்தை மேற்கொண்டு அனுபவித்துவந்த உரிமைகளுக்கும், சுயநலங்களுக்கும் இனி இடமே கிடையாது. இதுவரையும் பெரும் பிழையைச் செய்ததற்காக இன்னும் அப்பிழையைச் செய்து செல்லவேண்டுமா? இந்திய மக்களின் மீட்சிக் காலம் சமீபித்துவிட்டதால், அவர்களை இதுவரையும் சுரண்டி வாழ்ந்தோர் இனி அடங்கி யொடுங்கவேண்டியது தான்.

இலங்கையிற் பெரும்பான்மைக் கட்சியினரது விருப்பத்துக்கு இணங்கிச் சுதந்திரத்தை பிரிட்டிஷார் எப்படி அளிக்க முன்வந்தனரோ, அவ்வாருகவே இந்தியாவிலும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நிறைவேற்றப் பிரிட்டிஷ் அரசினர் முன்வந்து நிற்கின்றனரெனலாம். சுதந்திரத்துக்குத் தடையை இலங்கையிற் புரிந்த பொன்னுக்கள் எப்படிப் புறத்தேவிடப்பட்டனரோ, அப்படியே இந்தியாவில் ஜின்னுக்களும் விடப்படுவது நிச்சயம். எப்பொழுதும் என்னுட்டிலும் சிறுபான்மைக் கட்சியினர் இருந்தே வருவர். இவர்களை ஒருபோதும் பூரணமாகத் திருப்தி செய்ய வியலாது. இவர்கட்காகத் தேசத்தின் சுதந்திரப் பேறு தடைப்படுவதா? இப்போது தமது கட்சி பெலங் குன்றுவதை ஜனுப் ஜின்னு கண்டு மகாத்மா காந்தியையும் காங்கிரஸ் சபையையும் வசைமொழிகளால் இகழ்ந்தபடியே நிற்கின்றனர். ஆத்திரமுண்டாகவே, நிதானமும் இவரிடத்தில்நழுவுகின்றது. எதையும் பொறுத்துக்கொள்ள மகாத்மா காந்திக்குச் சக்தியுண்டு. இந்தியா பூரண சுதந்திரமடைவதொன்றே அவர் வேண்டுவது. இன்னுமொரு மாதத்துள் இந்தியா அடிமை நிலை நீங்கிச் சுதந்திர நிலையை அடையுமென்பது உண்மை. அப்பொழுது தான் உலகமும் உறுதியான சமாதானத்தை அடையுமென்பது உலகப் பெரியாரின் திடமான அபிப்பிராயமாகும்.

## தூதுக் கோஷ்டி

### கிரிப்ஸ் கருத்து

சேர் கிறிப்ஸ் கூறியதாவது: ''பிரதம மந்திரி சில தினங்களுக்கு முன்பு எந்தக் கொள்கையைப்பற்றிப் பேசினரோ அந்தக் கொள்கையை இராஜப் பிரதிநிதியுடனும் இந்தியருடனும் சேர்ந்து நிறைவேற்றி வைக்க முடியும் என்ற பலத்த நம்பிக்கையின் பேரிலேயே நான் மற்ருேர்தடவையும் இந்தியாவுக்குப் புறப்படுகின்றேன்.''

கடற்படை மந்திரி ஸ்ரீ. அலெக்ஸான்டர் இவர்கள் புறப்படுவதற்கு 3 மணி நேரத்திற்கு முன்னுல் தனி விமானத்திற் கிளம்பினுர். இவர்கள் இந்தியாவுக்கு போகும் காரியம் முடிவதற்கு எவ்வளவு காலமாகும் என்பதைப்பற்றி மந்திரிகள் எதுவும் கூறவில்லை ஆனுற் கடற்படை மந்திரி மாத்திரம் வாரங்களாகவல்லாம் அல்லது மாதங்கள் ஆயினும் ஆகலாம்'' என்ருர்.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

குடிசனமதிப்பு வெற்றிகரமாக நடந்தேறியதையிட்டு ஸ்ரீ நணசிங்கா குதூகலிக்கின்ருர். ஆரம்பத்தில் இது விஷயமாக யாழ்ப்பாணப் பட்டினம் திருப்திகரமாக வேலை செய்யவில்லையென்ற புகாரும் எழுந்தது. அனைத்தும் படுமோசமாகிவிடுமோ வெனவும் பலர் பயந்தனர். அப்படியொன்றும் நிகழவில்லையென குடிசனமதிப்புப் பகுதித் தலைவர் கூறுகின்ருர். இது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்திதான்.

மதிப்பெடுப்பு வெற்றியுறுவதற்கு நாட்டில் அநேக அன்பர்கள் உறுதுணை புரிந்திருக்கின்றனர். ஒரு முறைபோற் பலமுறை அயலவர்களின் படலைகளைத் திறந்திருக்கின்றனர். இவர்களின் சேவைக்கு அரசாங்கம் பொற்கிளி அளிக்குமெனத் தெரிகின்றது! அப்பணத்தை அதிகாரிகள் வசூலித்துக் கொள்ளாமல் இத்துறையில் முயற்சித்த அத்தனைபேருக்குங் கொடுக்க வேண்டும். பிறர் சொத்துச் சிவன் சொத்தல்லவா?

### பொறுத்திருங்கள்

ஸோல்பெரித்திட்டம் நடைமுறைக்கு வரமுன்னர் அரசாங்கசபையைக் கலைத்து மற்றுமோர் பொதுத்தேர்தல் வைக்கும்படி ஒருவர் லண்டன் மந்திரி சபையில் யோசனைகூறியிருக்கின்ருர். குடியேற்றநாட்டு மந்திரி புதுத்திட்டத்துடன்தான் பொதுத்தேர்தல் நிகழுமெனத் தெரிவித்திருக்கின்ருர். சிறுபான்மைச் சமூகத்தினர் சிலர் அரசாங்க சபையைக் கலைத்துவிட்டு மீண்டுமோர் பொதுத் தேர்தல் ஏற்படுத்தும்படி குடியேற்ற நாட்டுமந்திரியைக் கேட்டிருந்தார்களாம். இவர்களை அமைதியாக விருக்கும்படி குடியேற்ற நாட்டு மந்திரி கூறியிருக்கின்ருர். இச்சிறுபான்மைக்கோஷ்டியினர் யாராகவிருக்கலாமென நீங்கள் அறிய விரும்புகின்றீர்களல்லவா?

### மொழிச் சிக்கல்

இலங்கையின் அரசாங்க பாஷை தமிழாக இருக்கவேண்டுமோ, அன்றேல் சிங்களமாக மாறவேண்டுமா என்பதை ஆராய்வதற்குக் கொழும்பில் விசாரணை ஆரம்பமாகிவிட்டது. டாக்டர் ஜென்னிங்ஸ் அவர்களின் அபிப்பிராயத்துக்குப் பத்திரிகைகள் நல்ல மதிப்புக் கொடுக்கின்றன. அவர் ஏகாதிபத்தியத்தின் தூண் அல்லவா? ஆகவே, இங்கும் அவர் இடம் பெறுகின்ருர். பெல்ஜியத்தில் அரசாங்க பாஷை இரண்டெனவும், சுவிட்ஸலாந்தில் நான்கெனவும் பல்கலைக் கழகத்து அத்தியட்சகர் தெரிவிக்கின்ருர்.

ஸ்ரீ டட்லி சேனநாயகாவின் தேகத்திற் சிங்கள இரத்தங் கங்குகரையின்றிப் பாய்கின்றது. சிங்களர் தமிழ்ப்படிப்பது அவருக்குத் துளிகூடப்பிடிக்கவில்லை. ஆனல், தமிழர் அத்தனை பேரும் சிங்களம் கண்டிப்பாகப் பயிலவேண்டுமென ஒற்றைக் காலில் நின்று 'தம்'பிடிக்கின்ருர். தனுஷ்கோடிக்கு அப்பால் 40 கோடி தமிழர் இருப்பதால் தமிழ் மொழி அழிந்துபோகாதென்பது குட்டி சேனநாயகாவின் சித்தாந்தம்.

தமிழ் ஆட்சி புரிந்தாலென்ன, சிங்களம் சிங்காசனத்தில் அமர்ந்தாலென்ன அந்நிய அரசாங்கம் இந்நாட்டை விட்டு மூட்டைமுடிச்சுகளுடன் வெளிக்கிளம்புமாகில் அதுவே போதுமானது. சிங்களக் குட்டிச் சாத்தான் இதற்கு என்ன சமாதானங் கூறப்போகின்றது?

### ''செக்ஸோ'' சஞ்சிகை

கடந்தவாரம் 'செக்ஸோ' சம்பவம் என்ற குறிப்பைப் படித்த இலங்கைப் பல்கலைக் கழகத்து மாணவன் ஒருவர் குறித்த வெளியீடு ஒன்றை எமது பார்வைக்கு அனுப்பியிருக்கின்ருர். ஏதோ அப்பத்திரிகையில் அருவருப்பான வாசகம் இருப்பதாக டைம்ஸ் பத்திரிகை அட்டகாசஞ் செய்தது. அப்பத்திரிகையின் தலையங்கத்தையும் பல்கலைக் கழகத்து மாணவரின் பத்திரிகைபற்றி அது தந்த செய்திகளையும் படித்தவர்கள் ஏதோ கேடு அதிகம் விளைந்துவிட்டதாகவே கருதுவார்கள். ஆனுற் சஞ்சிகையைப் படிக்கும்போது அதில் மோசமான விஷயம் அப்படி ஒன்றுமில்லை. ''எனது குறிப்புப் புத்தகத்தின் சில பகுதிகள்'' என்ற தலைப்பிற் சஞ்சிகையில் ஒரு விஷயம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அவ்விஷயம்விறுவிறுப்பான ஆங்கில நடையில் அழகாக எழுதப்பட்டிருக்கின்றது. அதைஎழுதியவர் சில விஷயங்களைப் பச்சையாகக் கூறுகின்ருர். இப்படியான இலக்கியம் தற்காலத் தமிழிலும் ஆங்கிலத்திலும் மலிந்திருக்கின்றது. உண்மை என்னவென்ருல் அச் சஞ்சிகையில் கொம்யூனிஸ்ட் கொள்கைகள் செறிந்திருக்கின்றன. இவை வெள்ளைக்காரப் பத்திரிகைக்கு வெருட்சியை உண்டாக்கியிருக்கின்றன.

### மகாமோசம்

இதுபற்றி டைம்ஸ் எழுதித் தள்ளிய தலையங்கம் கேவலமானது. சஞ்சிகைவிஷயத்திலும் பார்க்கத் தலையங்கம் விஷ(ம)ம் பொருந்தியது. இதையறியாமல் பல்கலைக்கழகத்து அதிகாரிகள் 'செக்ஸோ' ஆசிரியர் மீது எடுத்த நடவடிக்கை மிகக் கடுமையானது.

'டைம்ஸ்' அழுது புலம்பிய விடத்தும் ஏனைய ஆங்கிலத் தினசரிகள் இவ்விஷயத்தில் அக்கறை காட்டவில்லை. சஞ்சிகை டெய்லி நியூஸ் அழுத்தகத்திலேதான் பிரசுரஞ் செய்யப்பெற்றிருக்கின்றது. ஏனைய ஆங்கிலப் பத்திரிகைகள் மௌனமாக விருப்பதும் ஒரு விந்தைதான்!

## 224-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

198-ம், 203-ம் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல் சம்பந்தமாகப் பின்வரும் மொத்தப் பங்கீட்டு வியாபாரிகளும் கூடுதலாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

| இடப்பரப்பு | பங்கீடும் செய்யும் வியாபாரியின் பெயர் | விற்பனை செய்யும் திக்திகள் |
|---|---|---|
| புத்தளம் | மெஸர்ஸ். பீ. ரீ. எம். இப்ருகிம் | சனிக்கிழமை காலை 10 ம. |
| மன்னர் | ,, கே.எம்.ஏ.கச்சிமுகமது | வியாழக்கிழமை ,, 10 ம: |
| வவுனியா | ,, சீ. எச். ஏ. டீ. சில்வா | சனிக்கிழமை ,, 9 ம. |
| மட்டக்களப்பு | ,, லத்திவ் ஸ்டோர்ஸ் | வெள்ளிக்கிழமை ,, 9 ம. |
| கேகாலை | ,, வீ. கே.பஸ்ரியன்அப்புகாமி | வியாழக்கிழமை மாலை 1 ம. |
| திரிகோணமலை | ,, டாவூட் ஸ்டோர்ஸ் | செவ்வாய்க்கிழமைகாலை9ம. |
| அனுரதபுரி | ,, சுலைமான் அப்பா | திங்கட்கிழமை ,, 9 ம. |

(2) பின் வரும் வியாபாரிகளின் விற்பனைத் தேதியும் நேரமும் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| இடப்பரப்பு | பங்கீடுசெய்யும் வியாபாரியின் பெயர் | விற்பனை செய்யுந் திகதிகள் |
|---|---|---|
| பெல்மதுளை | மெஸர்ஸ்என்.சின்னப்பாபிள்ளை அன்ட்ஸன்ஸ். | வியாழன் காலை 10ம. |
| றகத்துங்கொடை | ,, ஏ.எஸ்.ரீ.பெரியசாமிப்பிள்ளை அன்ட் ஸன்ஸ் | வியாழன் காலை 9 ம. 30 நிமி. |

கொழும்பு,
19-3-1946.

ஈ. ரொட்றிகோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி.

[2694]

## இந்தியாவின் பலம் அஹிம்ஸை

### பெருமை தருவதும் அதுவே

பேராசிரியர் ஜே.ஸி.குமரப்பா

மற்றையோரை நாம் எமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவருதற்கு உதவியாகவுள்ள சக்திகள் இரண்டுள. ஒன்று உள்ளதைத் துணையாகக்கொண்டு பிழைகளை நீக்கிக் குறைகளை நிவிர்த்தி செய்யுங்கால் வந்து சேர்வது. மற்றையது அழிவு செய்வதால் உண்டாவது. அன்பும்தொண்டுமே முதலாவதற்கு இன்றியமையாதன. பகையும் அச்சமுமே இரண்டாவதற்கு ஆதாரமாயுள்ளன.

இற்றைய உலகம் இரண்டாவதாகக் கூறப்பட்ட சக்திக்குள்ளடங்கி நிற்பதாகும். எங்களுடைய சமுதாய வாழ்க்கை முறையும் பொருளாதார நிலையும் இந்தச் சக்தி தோற்றுவதற்குக் காரணங்களாயின. நமது அயல் நாட்டினரை எமது ஆதிக்கத்துள் வைத்திருப்பதால் இந்நிலை ஏற்படுவதாகும். யந்திரங்களின் உதவியாற் பொருட்கள் தயாரிக்கப்படும் பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் தூரதேசங்களிலிருந்தே பெறப்படுகின்றன. இப்பொருட்களை விலைப்படுத்துவதற்கு வேண்டிய நாடுகளைத் தேடிக் கண்டு அவைகள் மீது ஆதிக்கஞ் செலுத்துவதும் அவசியமாகும். புடவைகள் நெசவு செய்யப்படும் பெரிய தொழிற்சாலைகள் பருத்திப் பஞ்சு சிறிதும் உண்டாக்கப் பெருதமான்செஸ்ரர் பட்டினத்தில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. தேவையான பஞ்சு அந்நகர்க்கு 6000 மைல்கட்கு அப்பாலுள்ள இந்தியாவிற் பெறப்படுகின்றது. அதனை நூலாக நூற்றுப் பின் புடவையாக நெசவு செய்து, மறுபடி 6000 மைல்கட்கு அப்பாலுள்ள இந்தியாவுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது. எனவே இந்தியாவில் பருத்தியுண்டாக்கும் கமக்காரரின் நிலையைக் கட்டுப்படுத்துபவர் மான்செஸ்ரர் நகரிலுள்ள புடவைத் தொழிலாளரே. இத்தொழிலாளர் தமது அதிகாரத்தை இந்திய அரசினர் மாட்டுச்செலுத்தித் தமக்கு வேண்டிய சிலாக்கியங்களை விரும்பியபடி பெற்றுக் கொள்கின்றனர். இந்த அதிகாரத்தை எப்படிப் பெறுகின்றனர்? விஞ்ஞான சாஸ்திரவன்மையாலென்பாம். அணுப்பிரளயக் குண்டினைக் கண்டுபிடித்துயாவரையும் திகைப்படையச் செய்கின்றனர். ஜெர்மனியர் யப்பானியரைக் கொடியவரெனக் கூறி அவரை இளைஞர்கள் வெறுக்கும்படி செய்கின்றனர். அவர்கள் பொருட்களை முற்றாகத் தூர்த்தி விட்டனர். இதன் பெறுபேறு இந்தியா என்றும் அடிமை நிலையில் இருக்க வேண்டியதுதான்.

இந்த ஆதிக்கத்தை யடைவதற்கு வல்லரசினர் பலாத்காரத்தையே மெச்சி அதற்கே முதலிடமளிக்கின்றனர். யுத்தத்தைத் திறமையாக நடத்தினதற்காகச் சில சேனுதிபதிகட்கு லண்டனிலுள்ள கிறீஸ்த தேவாலயங்களில் ஞாபகச் சின்னங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. தெய்வங்கட்குப் பக்கத்தில் இவர்கள் இடம் பெறுங்காலமாயிற்றே! இப்படிச் செய்தாற்ருன் கடற்சேனை, தரைச்சேனை ஆகாயப்படை என்பனவற்றில் போதிய படைவீரர் விரும்பிச் சேர்வாரென இவர்கள் அறிவார். கொலைபுரியும் போர்வீரர் தேவாலயங்களில் இடம்பெறுங் காலமாயிற்றே! நாகரிகத்தின் வீழ்ச்சி இத்திறமாயிற்று. இம்முறைதான் உலகத்தில் தலைவிரித்தாடும் கொள்கையுமாகும். வல்லரசினர் அணுப் பிரளயக் குண்டினைக் காட்டிப்பயமுறுத்தி நிற்க, மற்றையோர் அதனுல் அழிவேற்படுமென அஞ்சி, பணிந்து நிற்கின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமப் பொருளாதாரம்

## ஸ்ரீ குமரப்பா கருத்துக்கள்

**கிராம வாசிகள் இமயத்தில்** வதிந்தாலென்ன இலங்கையில் வசித்தாலென்ன அவர்களுக்காகத் தமது உயிரையும் அர்ப்பணஞ் செய்யத் தயாராக இருப்பவர் பேராசிரியர் ஜே. ஸி. குமரப்பா அவர்கள். இப் பெரியாரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவைத்த பெருமை காரைநகர் கிராமப் புனருத்தாரணச் சங்கத்துக்கே உரியது. பத்துத் தினங்கள்வரை காரைநகரிலே தங்கியிருந்த டொக்டர் குமரப்பா யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களுக்குஞ் சென்று கிராமச் சீரமைப்புச் சம்பந்தமாகப் பயனுள்ள புதிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

உலகிலுள்ள அநேக பல்கலைக் கழகங்களிலிருந்தும் ஸ்ரீ குமரப்பா பல பட்டங்களைப் பெற்றுள்ளார். இந்தியாவின் முதன்மை வாய்ந்த பொருளாதார நிபுணனென உலகம் அவரைப் போற்றுகின்றது. தவிர உலகப் பொருளாதார நிபுணர்களுக்கும் இவர் சளைத்தவர் அல்ல. பல தேசங்களையும் இவர் தரிசித்திருக்கிறார். இங்கிலாந்தில் அநேகவருடங்களாகப் பொருளாதாரத்தை மிக ஆராய்வுடன் பயின்றிருக்கின்றார். பிரான்ஸ், ஜேர்மனி போன்றநாடுகளைத் தரிசித்த ஸ்ரீ குமரப்பா ருஷியா செல்லவில்லை. இருவருடகாலம்வரை அமெரிக்காவிலே தங்கியிருக்கின்றார். தஞ்சாவூரிலே பிறந்த ஒரு தமிழனாகவிருந்தபோதிலும் தமிழ் மொழியைத் தண்ணீர்போலப் பேசமுடியாத நிலைமையிலிருக்கின்றார். ஆனால் நண்பர்களுடன் தமிழிற் சம்பாஷிப்பார். இத்தனைக்கும் அவர் தமிழ்நாட்டில் அதிக காலம் இல்லாதிருந்ததே காரணம். வாழ்க்கையில் அதிகமான பகுதி பிறதேச சஞ்சாரத்திலும் வட இந்தியாவிலுஞ் செலவாகி வருகின்றது. மேனாட்டு வாழ்க்கையுடன் அநேக காலந் தொடர்புற்று மேற்றிசை நாடுகளிலே பொருளாதார ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டிருந்த போதிலும் டொக்டர் குமரப்பா அப்பழுக்கற்ற தமிழனாகவே காணப்படுகின்றார்.

பால்போன்றகதருடையணிந்து காந்தித் தொப்பியுடன் விளங்குகின்றார். சலவை செய்த துணிகளை அவர் அணிவதில்லை. இவற்றினும் மேலான அவர் உள்ளம் இந்தியக் கிராம வாழ்க்கையிலே பண்பட்டு அதில் ஊறியிருக்கின்றது. ஏழைக் கமக்காரனைக்கண்டு அவர் உள்ளந் துடி துடிக்கின்றது. குமரப்பா சகோதரர்கள் அனைவரும் இந்தியாவின் வளர்ச்சிக்காகவே உழைத்து வருகின்றனர். ஸ்ரீ பரதன் குமரப்பா, ஸ்ரீ ஜே. எம். குமரப்பா என்பவர்களும் டொக்டரின் சகோதரர்கள்தான். பரதன் குமரப்பா காந்தித் தத்துவம், யுத்த பிற்கால அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற விஷயங்களில் நல்ல ஞானம் படைத்தவர். ஸ்ரீ ஜே எம். குமரப்பா டாடா சமூக சேவை ஸ்தாபனத்தின் தலைவர். அமெரிக்க கல்விக் கழகங்களின் அழைப்பையேற்று சமூக சேவையைப் பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்த அமெரிக்கா சென்றிருக்கின்றார். இவர்களின் சகோதரி லலிதா குமரப்பாவும் கலைப்பண்பு மிகுந்தவர்.

பேராசிரியர் ஜே. ஸி. குமரப்பா கடந்த வருட இந்நாட்களிற் சிறையுற்றிருந்தார். அவருடைய தேகநிலை மிகவும் பழுதுற்றுவருவதைக்கண்ட அரசாங்கம் உடனே அவரை விடுதலை செய்தது. ஆனல் இவர் கிராம இயக்கத்துக்காகத் தமது உயிரையும் விட ஆயத்தமாகவிருக்கின்றார். ஆகவே, காந்தி அடிகள் அகில பாரத கிராமக் கைத்தொழிற் சீரமைப்புப் பொறுப்பை ஸ்ரீ குமரப்பாவிடம் ஒப்படைத்திருப்பது நூதனமல்ல.

ஒருநாட்டின் முக்கியமான தொழில் அந்நாட்டிலுள்ள மக்களுக்குத் தேவையான உணவையும் உடைகளையுந் தேடிக்கொள்வதே. இதன் பின்னரே ஏனைய தொழில்கள் என்பது ஸ்ரீ குமரப்பாவின் கருத்து. ஆதவே, விவசாயமே தொழில்களுள் முதன்மை பெறுகின்றது. இரண்டாவதாக ஆடை உற்பத்தி அமைகின்றது. அனைவரும் விவசாயமே தஞ்சமெனப் புகுந்தாற் பூமிக்குப் பாரம் ஏற்பட்டுவிடும். இதனல் தொழில் செய்ய விரும்புவோர்களுக்கு வேறு தொழில்கள் உண்டு. டொக்டர் அவற்றை இரு பிரிவுகளாக வகுக்கின்றார்:

1. சகலருக்குந் தேவையான பொருள்களை ஆக்குந் தொழில்.
2. சுகபோகப் பொருள்களையும் விநோதப் பொருள்களையுஞ் செய்யுங் குடிசைத் தொழில்.

மாவரைத்தல், நெற்குற்றல், எண்ணெய் ஊற்றல், சர்க்கரை செய்தல்போன்ற விளைபொருள்களைப் பக்குவமாக்குந் தொழில் முதற் பிரிவிற் சேரும். ஓய்வு நேரங்களில் தேனீ வளர்க்கலாம். சட்டி பானை வனைதல், கயிறு திரித்தல், காகிதஞ் செய்தல், துணிகளுக்குச் சாயமிடுதல், பித்தளைப் பாத்திரம் செய்தல், சுகபோகத்திற்குரிய தொழில்களாகும். விளைபொருள்களை வெளிநாடுகளுக்கனுப்பி அங்கு தயாராகி வருவனவற்றை நாம் பெறுவதாகில் நமக்குரித்தான வேலையையும் அதற்கெனக் கிடைக்குங் கூலியையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகும். இதனல் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகின்றது. ஆகவே, அகில பாரத கிராமக் கைத்தொழிற் சங்கம் நாட்டுச் சரக்குகளை உபயோகிப்பதற்காகப்பின்வரும் மூன்று முறைகளைக் கையாளுகின்றது.

1. பொருள்கள் பழுதடையாது தடுத்து உபயோகமற்றவையெனக் கருதப்படும் பண்டங்களை உபயோகஞ் செய்ய முயலுதல்.
2. கிராமவாசிகளுக்குக் கிடைக்கும் பொருள்களை செவ்வனே பாதுகாத்தல்.
3. ஓய்வுநேரங்களைப் பயன் படுத்திக்கொள்ள போதிப்பதுடன் மக்களின் செல்வநிலையை விருத்திபண்ணத்தக்க தொழில்களைப் பயிற்றல்.

உணவு, நோயற்ற வாழ்வு, சுகாதாரம் என்பன முதற் பிரிவிற் சேர்கின்றன. இன்றைய நிலையிற் பொருளாக்கத்துக்கு முக்கிய சக்தி மனிதன். சத்தற்ற உணவை அவன் உட்கொள்வானுகில் அவன் நோய்வாய்ப்படுகின்றான். இதனல் உற்பத்தி குறையும். எங்கள் கிராமங்களில் அரிசி கோதுமைபோன்ற தானியங்கள் போதியளவு கிடைப்பதில்லை. ஜீவ சத்துக்கள் நிறைந்த காய்கறி தானும் அகப்படுவதில்லை. போதாக்குறைக்குக் கிடைக்கும் உணவுவகைகளை அவர்கள் சத்தற்றுப்போகும் முறையிற் தயாரிக்கின்றனர். இது மிகவுங் கெடுதலான காரியம். உதாரணமாகச் சத்தற்ற மில்லரிசியைக் கூறலாம்.

* *

குறித்த ஒரு தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள் உள்ளூரிலே கிடைக்கவேண்டுமென ஸ்ரீ குமரப்பா அழுத்தி அழுத்திக் கூறுகின்றார். வெளிநாட்டிலிருந்துவரும் மூலப் பொருள்களைக் கொண்டு பண்டங்கள் செய்வதாகில் விலையின் மிகச் சொற்ப தொகையே மூலப் பொருளுக்குக் கொடுப்பதாயிருத்தல் வேண்டும். வெளிநாட்டிலிருந்து பித்தளைத் தகடுகளைப் பெற்றுப் பாத்திரங்களைச் செய்து, பாத்திரம் ஒன்றை நான்கு ரூபாவுக்கு விற்கும்போது பாத்திரத்தின் தகடுமாத்திரம் மூன்று ரூபாயாகுமானல் இவ் விற்பனையில் 75 சத விகிதம் வெளிநாட்டுக்கு ஓடிவிடுகின்றது.

கிராமத்தினருக்கு வேண்டிய ஊண், உடை, வசிக்க இல்லங்கள் இவற்றைப் பெறுவதற்கு முயலாது வெளிநாட்டு விற்பனைப் பொருள் செய்தல் தவறென ஸ்ரீ குமரப்பா கூறுகின்றார். இதை அழகாகவும் விளக்குகின்றார்:

சில மிஷனரிமார் கிராமவாசிகளை உயர் ஜாதிக் கோழிகளை வளர்க்குமாறு கற்பிக்கின்றனர். 'லெக்ஹோண்' சிவப்பு சாதிபோன்ற சீமைப் பறவைகளை நமது நாட்டுக் கோழிகளுடன் கலக்கும்படி கூறுகின்றனர். இதன் விளைவாகக் கிடைக்கும் முட்டைகள் பெரிதாகவே யிருக்கின்றன. கோழிகளும் அழகாகக் காணப்படுகின்றன. ஆனற் குடியானவன் அந்த நல்ல முட்டைகளை உட்கொள்ளாது நகரங்களுக்கு எடுத்துச் சென்று தனவந்தர்களுக்கு விற்கின்றான். உயர் ஜாதிப் பறவைகளை வளர்ப்பதற்கு அதிக பணஞ் செலவாகின்றது தவிரக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாக்க வேண்டியுமிருக்கின்றது. இனி, தொற்றுநோய் ஏற்படின் அத்தனை கோழிகளும் இறந்துவிடுகின்றன. இவ்வித முயற்சிகளிற் கிராமவாசிகள் ஈடுபடக்கூடாது. நாட்டுக் கோழிகளை நல்ல முறையில் வளர்த்துக் கிடைக்கும் முட்டைகளைக் குடியானவனும் அவனுடைய குடும்பமும் சாப்பிட வேண்டும். மிகுதியை விற்றுத் திருப்தி யடைவதே சிறந்த மார்க்கம்.

**ஸ்ரீ.** குமரப்பா அவர்கள் ஏகாதிபத்தியத்தின் விதையையும், எமக்குத் தெளிவாக விளக்குகின்றார். சாதாரணமாக நாங்கள் ஏகாதிபத்தியம் என்று சொல்லும்போது ஒரு நாடு பிறிதொரு நாட்டை அடக்கியாண்டு அதன் பேருக லாபம் பெறுவதையே குறிக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட ஒரு மனிதனிடமுங் காணலாம். பிறர் உழைப்பினின்றும் ஒருவன் இலாபமடைவதே இதன் சாரம். இது ஏகாதிபத்திய முறை. ஆலைத்தொழில் முதலாளி இதைத் தீவிரமாகக் கையாளுகின்றார். பொருளாக்கத்தைக் கருதி ஒரு நாடு செய்யும் இவ்வேலை ஈற்றில் ஏகாதிபத்தியத்தையே உண்டாக்குகின்றது. இதனற் சுதந்திரத்தைப் பெற முடியாது. இது இருமருங்குங் கூர்மையுடைய கத்திபோன்றது. உபயோகிப்பவனுக்கும், எதிரிக்கும் தீங்கு விளைக்கின்றது.

—அரியரத்தினம்

(அடுத்த இதழில் முடியும்)


# கிராம இயக்கம்

அகில பாரத கிராமக் கைத்தொழிற் சங்கத்தின் ஸ்தாபகரும், செயலாளருமான

**பேராசிரியர் ஜே. ஸி. குமரப்பா எழுதியது.**

கிராமச் சீரமைப்பு சம்பந்தமான பல புதுக்கருத்துக்கள் இந்நூலிற் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. "கிராமங்களிடம் அன்புள்ள எவரும் இப்புத்தகம் இல்லாமல் இருக்க இயலாது ..." என மகாத்மா காந்தி கூறுகின்றார். கிராம இயக்கத்தின் சகல அம்சங்களையும் இந்நூலில் ஸ்ரீ குமரப்பா ஆராய்ச்சியுடன் எழுதியிருக்கின்றார்.

**விலை ரூபா 3-50**

இலங்கையில் இந்நூல் கிடைக்குமிடம்:

**S. S. சண்முகநாதன் & சன்ஸ்**

**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்**


## ORDER NISI

In the District Court of Jaffna

In the matter of the Estate of the late Ellen Gnanam widow of A.C. Aseervatham, deceased of Chavakachcheri

Testamentary Jurisdiction | No. 512

**Annet Rajakulasingam Aseervatham** of Chavakachcheri now of Ministry of Agriculture. *Petitioner.*

Vs.

**Lizetta Ariyanayagam** widow of **J. V. Kandavanam** of Chavakachcheri. *Respondents.*

This matter coming on for disposal before R. R. Selvadurai, Esquire, District Judge on January 8, 1946, in the presence of Mr. S·K· Thiravianayagam Proctor on the part of the petitioner and the affidavit of the above-mentioned petititioner having been read:

It is ordered that the petitioner be declared entitled to have letters of Administration to the estate of the said intestate and that such letters be issued to him accordingly, unless the respondents or others interested shall, on or before February 15, 1946 show sufficient cause to the satisfaction of this court to the contrary.

Sgd. **R. R. Selvadurai**
District Judge

January 8, 1946,
Extended and reissued for April 9, 1946.

Sgd. **R. R. Selvadurai**
[2668] District Judge

## திருமணம்

**நவரத்தினம்—நாகேஸ்வரி**

அராலி ஆங்கில பாடசாலை ஆசிரியர் பண்டிதர் வி. **நவரத்தினம்** அவர்களுக்கும் கந்தரோடை பென்சனியர் ஆ. தம்பு அவர்களின் புத்திரி **நாகேஸ்வரி** அம்மாளுக்கும் பங்குனிமீ கசவ (27-3-46) புதன்கிழமை இரவு 8 மணியளவில் மணமகளில்லத்தில் திருமணம் நிகழும். அத்தருணம் அன்பர்களனைவரும் சமூகந்தந்து ஆசீர்வதிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**வி. செல்லப்பா**
ஆயுள்வேதவைத்தியர்
நாச்சிமார்கோவிலடி
கொக்குவில்

**ஆ. தம்பு**
F. M. S. பென்சனர்
கந்தரோடை, சுன்னகம்.

[2693]

# இந்தியாவின்பலம் அஹிம்ஸை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றனர். உலகத்தை யடக்கி விட்டது உண்மைதான். ஆனல் ஆன்ம சக்தியும் அஹிம்சையும் மறைந்து போயின.

இத்தீமையை நீக்க நாம் செய்யத்தக்கது யாது? உண்மையின்படி எதுபெரியது, ஒன்றினது பெருமையை எதைக் கொண்டு நிச்சயிப்பது என்பதை நாம் திட்டப்படுத்த வேண்டும். யந்திரங்களால் நாம் நன்மையை அடைகிறோம் என்ற பிழையான விளக்கத்தை விட்டுப் பொது சனங்களாகும் ஏழைகளின் நன்மைக்காக நாம் உழைக்கவேண்டும். உலக வாழ்க்கையில் நாம் அடையுஞ் சுகங்களை இலக்காகக் கொண்டு வாழ்க்கையை மேற்கொள்ளாதிருப்போமாக. அவசியமில்லாத பல தேவைகளை நாம் சிருட்டித்துப், பின் அவைகளைத் தேடி நிற்பது பிழையாகும். அவசியஞ் செய்யவேண்டியது என்னவென்பதை நாம் பிரதானமாக அறியவேண்டும். அளவுகடந்த பொருட்களையும் வசதிகளையும் பெற்றிருப்பது உண்மையான சீவியத்துக்கு அடையாளமாகாது.

இந்த அக்கிரமங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள இந்தியா ஓர் பெரிய வழியைக்கண்டு பிடித்துளது. சமுதாய வாழ்க்கையில் பற்பல திறத்தினர்க்கு ஏற்பட்டுள்ள மதிப்பிலிருந்து இதனையறியலாம். மற்றைய மக்களுக்கு அழிவை யுண்டாக்கிச் சந்தோஷமாக வாழ்பவர்கள் மிகக் குறைந்த [illegible] படுகின்றனர். பொருளாதார முறையில் மற்றையோரை அடிமைப்படுத்தி அவர்கட்குத் துயர்விளைப்பதும் இத்தன்மையதே. இன்னோர் சோம்பேறி வகுப்பினருளர். தாம் ஒரு பொருளையும் தயாரிக்காது மற்றையோரிடமிருந்து அவைகளைப் பெற்றுவாழ்வதே இவரின் இலட்சியம். பெரிய பிரபுபோல் இறுமாப்படைந்து வாழ்பவரை நாம் வழிகாட்டிகளாகக் கொள்ளவியலாது. தனவந்தராக விருப்பவர்களும் இவ்வகுப்பினரே. அடுத்தபடியில் நிற்போர் பொருளாதார நிலையை மட்டுப்படுத்துவோர்; இவர்கள்தான் வியாபாரிகள். பணத்தைத் தேடிச் செல்வர்களாவதுடன் நமது வாழ்க்கை சீரடைந்து போகவில்லை. நான்காவதாகக்கூறப்படும் வருணத்தில் முதலிருவகுப்பினராகும் க்ஷத்திரியரும் பிராமணரும் பொதுமக்கட்குச்சேவை புரிபவர்கள். க்ஷத்திரியர்கள்பொது மக்களின் குறைகளை நீக்கி அரசியலை நிருவகிப்பர். பிராமணர் சமயம், கல்வி என்பவற்றை விருத்தி செய்வர். இந்த உயரிய கொள்கைகளை இலக்காகக் கொண்ட இந்தியாவின் பெருமையும் ஆத்ம சக்தியும் உலகிலுள்ள எல்லா நாடுகளையும் ஊடுருவி வியாபித்தது. யாவர்க்கும் அறிவையும் ஒளியையுங் கொடுத்தது. உயர்ந்த உண்மை நாகரிகத்தோடு கூடிய இச்சக்தி உலகில் சமாதானத்தையும் ஒற்றுமையான வாழ்க்கையையும் நிலைபெறச் செய்தது என்பாம்.

இந்த முறைப்படி விஷயங்களை நோக்கின் ஒருவன் தனது சுகத்துக்காக மாத்திரம் வாழ்வது, வாழ்க்கையின் நோக்கமாகாது. சுகமான வாழ்க்கையை மாத்திரம் நாம் விசேஷமாக கவனித்தால் எமது கொள்கை இன்பங்களையும் உரிமைகளையும் பெறுவதில் முனைந்து நிற்பதாக முடியும். கடைசியாக இதனல் ஏற்படும் பெறுபேறு, பிணக்குகளும் யுத்தங்களுமேயாம். இதைவிட்டு நாம் நமது கடமைகட்கு விசேஷ கவனஞ் செலுத்தின் எம்முடையவாழ்க்கையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம். தேவைகளையும் மட்டுப்படுத்தலாம். இதுதான் உண்மை நாகரிகத்துக்கு அடிப்படையாகவுள்ளது. ஏழைகளின் நன்மையை நாடித் தொண்டுசெய்வதில் நமது வாழ்க்கையில் அளவு கடந்த அக்கறை காட்டவேண்டும். இதைச் செய்யுங்கால் நாம் ஹிம்சையை முற்றாக ஒழித்து விடுகின்றோம். அத்துடன் மற்றையோர் மாட்டு எமக்குள்ள அதிகாரமும், நமது பயமுறுத்தலாலல்லாமல் நமது அன்போடு கூடிய தொண்டினுல ஏற்படுகின்றது. இவ்விதமான அதிகாரத்தையே இந்தியா பெற்றிருந்தது. இன்றும் அப்படியே பெறும். இருநாட்டினர்க்கிடையில் ஏற்படும் பரஸ்பர மதிப்பும், மரியாதையுமே உலக சமாதானத்துக்கும் கலாசார விருத்திக்குங் காரணமாகும்.

—'ஹரிஜன்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஆசிரியர்க்குக் கடிதங்கள்**

# கணக்குப்பரிசோதனைப் பகுதித் தலைவர்

இலங்கைக் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவர் பீடத்தை இப்போது வகிப்பவர் பகிரங்க சேவையினின்றும் இளைப்பாறுவதற்கு முடிவு செய்துவிட்டார். இதுதான் கௌரவமான முறை. அவரைப் பொறுத்த வரையில் இவ்விஷயம் முற்றுப்பெற்றுவிட்டது. ஆனால் சுதந்திரப் பிரதிக்ஞை செய்து நாட்டு விடுதலைக்காக அதிகம் பேசித்திரியும் அரசியல் வாதிகளின் செய்கையை நாடு ஒருபோதும் மறக்கமுடியாது. அந்நிய நாட்டிலிருந்து 'ஓடிற்றர் ஜெனரல்' ஒருவரை இறக்குமதி செய்வதற்குச் சாதகமாக வாக்களிப்பதே சரியென இவர்களுக்குத் தெரிந்தது. இலங்கைத் தேசீய காங்கிரஸ் இது விஷயத்திற் தனது சுயரூபத்தைக் காட்டிவிட்டது. காங்கிரஸைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அனைவரும் அத்தீர்மானத்தை ஆதரித்தனர். இவர்களில் ஸ்ரீ டட்லி சேனநாயகாவும் ஒருவர். சந்தர்ப்பத்துக்கேற்ப அவர் ஒரு சொற்பெருக்கையும் விளாசிவிட்டார். ஐக்கிய தேசங்களுடன் இலங்கையும் இணைய வேண்டுமென அட்டகாசமிட்ட இலங்கைத் தேசியக் காங்கிரஸ் தலைவரும் அத் தீர்மானத்துக்கு அடிபணிந்துவிட்டார். சமீபத்திற் தீவிர தேசியவாதி என்று சொல்லிக்கொள்ளும் ஸ்ரீ J. R. ஜயவர்த்தன இந்தோனேஷிய மக்களின் சுதந்திரப் போரைப் போற்றிப் புகழ்ந்தார். இந்தோனேஷிய மக்கள் ஒருவேளை ஒல்லாந்திலிருந்து ஒரு கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவரை இறக்குமதி செய்திருப்பதாக அவர் எண்ணினாரோ தெரியாது. இந்தோனேஷியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கூறுபவரே இலங்கைக்கு ஒரு வெள்ளைக்கார 'ஓடிற்றர் ஜெனரல்' வேண்டுமெனவுங் கூக்குரலிடுகின்றார். ஸ்ரீ டட்லி சேனநாயகாவைப் பொறுத்தமட்டில் அவர் கந்தவாலா அறிக்கைக்கு இப்போது காட்டும் மதிப்பையும் அதுபற்றி அவர் ஆரம்பத்திற் கூறிய வசனங்களையும் நாட்டு மக்கள் அறிய விரும்பலாம்.

1944-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ந் திகதி கந்தவாலா விசாரணைச் சபைக்கு மேலதிகமாக மதிப்பிட்ட செலவுத் திட்டம் பற்றி விவாதம் நிகழ்ந்தது. அவ்விவாதத்திற் பங்குபற்றிய ஸ்ரீ டட்லி சேனநாயகா பின்வருமாறு குறிப்பிட்டார். "பகிரங்கக் கணக்குச் சபைக்கு பதிற் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவர் இது விஷயத்தில் இடறுபவர் தான் என உணர்ந்தார். இவ்விசாரணையைச் சார்ந்த அத்தனை பேருந் தாங்களே இதிற் பாதிக்கப்படுபவர்களெனக் கருதுகின்றனர்.........ஆகவே, அனைத்தையும் ஆராய்வதற்கு ஒரு விசேஷ விசாரணைச் சபையை ஏற்படுத்துவது அவசியமாகின்றது. பதிற் கணக்குப் பரிசோதனைப்பகுதித் தலைவர், ஸ்ரீ. மெடிவாக்கா, ஸ்ரீ. கந்தாவலா, கௌரவ தொழில் மந்திரி, மாத்தளைப் பிரதிநிதி உட்பட அனைவருக்கும் இது விஷயம் திருப்தி அளிப்பதாயில்லை. பறங்கிக்காரரின் பிரதிநிதி, ஸ்ரீ. கனகரத்தினம் அவர்கள் பிழையான பாதையிற் செலுத்தப்பட்டிருக்கின்றார் என்ற கருத்துப்படவும் பேசியுள்ளார். எனவே, "ஸ்ரீ. கனகரத்தினத்தின் நேர்மைக்காகவும் .........." (இதற்கிடையில் ஸ்ரீ விலே குறுக்கிட்டபடியாற் தொடங்கிய வசனம் முடிவு பெறவில்லை)

விசாரணைச் சபையின் அறிக்கை அரசாங்கசபைக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிற் பத்து ரூபாயைக் குறைக்கும்படி ஸ்ரீ மொலமுரே பிரேரித்தார். அவருடைய பிரேரணையைச் சபை ஏற்றுக்கொண்டு குறித்த அறிக்கை மீது சபை தனது வெறுப்பையுந் தெரிவித்தது. பகிரங்க உத்தியோகஸ்தர் ஒருவரின் குற்றங்களை விசாரித்துப் பகிரங்க சேவைச் சபை சமர்ப்பிக்கும் அறிக்கையைச் சபை ஏற்கவும் முடியாது தள்ளவும் இயலாது. இதனாற் சபை தனது அதிருப்தியை மாத்திரங் காட்டியது. இருந்தும் அறிக்கையிற் தனக்குப் பிடித்த பகுதியையாகிலும் ஆதரிக்கும்படி ஸ்ரீ சேனநாயகா வேண்டினார். இந்நிலையில் மந்திரியின் மகன் ஸ்ரீ டட்லிசேனநாயகா எழுந்து ஸ்ரீ கனகரத்தினத்துக்கு எதிராக — குறித்த அப்பகுதியைக் குறிப்பிட்டார். ஆரம்பத்தில் அரசாங்கசபை இவ்வறிக்கையைப் பற்றித் தனது அதிருப்தியைக் காட்டியதை இவர் மறந்து விட்டார். இது சம்பந்தமாக விசேஷ விசாரணைச்சபை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென தாம் ஏற்கனவே கூறியதையும் இவர் ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை.

ஸ்ரீ கனகரத்தினத்தின் நேர்மை பற்றி ஒரு காலத்திற் பேசிய ஸ்ரீ டட்லி சேனநாயகா இப்போது அனைத்தையும் மறந்து விட்டார். விசேஷ விசாரணைச் சபை ஒன்று வேண்டுமென நின்றவரும் இவர்தான். தவிர 1945-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் வெளியாகிய பகிரங்கக் கணக்குச்சபையின் அறிக்கைசம்பந்தமாகக் கூறும்போது [கந்தவாலா விசாரணை பற்றிய பகுதி] கணக்குப்பரிசோதனைப் பகுதித் தலைவரின் மகத்தான சேவையை மிகவும் பாராட்டி ஸ்ரீ டட்லி சேனநாயகாவும் கைச்சாத்திட்டுள்ளார்.

தான் முன்னர் கூறிய வார்த்தைகளை நிராகரிப்பதற்காகவே ஸ்ரீ டட்லி சேனநாயகா சமீபத்தில் ஸ்ரீ கனகரத்தினத்துக்கு எதிராக அரசாங்கசபையில் நெருப்புக் கக்கியிருக்கின்றார்.

இந்த அழகில் பிரேஸ்கேர்டில் சம்பவத்தையுங் குறிப்பிடுதல் நல்லது. விசாரணைச்சபை இது விஷயமாக சேர் பரன் ஜயத்திலகாவை நம்பவில்லை. இருந்தும் ஸ்ரீ சேனநாயகாவும் அவருடைய மகனும் அவ்வறிக்கையைத் தள்ளும்படி வாதாடினர். அறிக்கையும் சமாதியடைந்தது! சேர் பரன் அவர்களும் பதவியை இழக்கவில்லை. அப்போதெல்லாம் ஸ்ரீ டட்லி சேனநாயகா மகத்தான சிங்களத் தேசீயவாதியாக நடந்து கொண்டார். இப்போது முற்றும் முரணான வேலையைச் செய்திருக்கின்றார். சந்தர்ப்பங்களுக்கேற்ப எங்கள் அரசியல் வாதிகள் தங்கள் கொள்கைகளைக் கைவிடத் தயாராகவிருக்கின்றனர் என்பதற்கு இச்சம்பவம் ஒன்றே போதுமானது.

கொழும்பு 18-3-46 இலங்கைவாசி.

## மாவிட்டபுரம் ஆலயமும் அதன் பரிபாலனமும்

ஆலயமானது சர்வகோடி ஆன்மாக்கட்கும் தெய்வ ஒளியை அறிவிற் பிரகாசிக்கச் செய்யுஞ் சாதனங்கள் அமைந்த பொதுநிலையம். அஃது பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ஒன்று சேர்ந்து தமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையுந் தத்தஞ் செய்து ஆன்மகோடிகளை நெறிப்படுத்தி ஈடேற்றும் உயரிய நோக்குடன் அமைக்கப்பெறுவதாகும். அவ்வாறு அரும்பெரும் முயற்சியின் பேருகத் தோன்றிய ஆலயங்களை அவைகளின் உண்மையான இலட்சியம் குன்றாமலும், கீலமடையாமலும் பாதுகாப்பது சைவமக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். இவ்வாலயங்கள் தனிப்பட்ட ஒருவரின் அல்லது ஒரு பகுதியாரின் பொருளைக்கொண்டாவது முயற்சியைப் பெற்றாவது அமைக்கப் படக்கூடியனவன்று. பெரும்பாலாரின் பொருளுதவியும் உடலுதவியுங் கொண்டு அமைக்கப் பெற்றுப் பொதுமக்கள் யாவர்க்கும் உரிமையுடையதாய் விளங்கும். நம் முன்னோரால் அமைக்கப்பட்ட ஆலயங்களுள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் ஒன்றாகும்.

இப் பெருமைவாய்ந்த திவ்விய ஆலயம், அதனை ஆதியில் அமைத்தோரின் நோக்கத்துக்கு நேர்விரோதமான வழியில், சென்ற சிலவாண்டுகளாக நடத்தப்படுவதைக் கண்டு, சைவமக்கள் மனம் அதிக துன்பத்தையடைகின்றது. நம் முன்னோர் இப் புண்ணியதலத்தை அமைத்ததுடன் நில்லாது, அதன் நித்திய நைமித்தியகருமங்கள் குறைவின்றிச் சிறப்புடன் நடைபெறும்பொருட்டுப்போதிய மூலதனமும் தேடிவைத்துள்ளார். அதன் பெறுமதி ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேலாகுமன்றிக் குறையாது. எவ்வித குறையுமின்றி மிக்க சிறப்புடன் நிலைபெறுதற்கு ஏற்ற மூலதனத்தை இவ்வாலயம் பெற்றிருந்தும், தேய்பிறைச் சந்திரன்போல் அது நாளடைவில் வளர்ச்சி குன்றிவருவதைக் கண்டு யாவர் மனமும் சலிப்படைகின்றதே. இப்பொழுது இவ்வாலயத்தைப் பரிபாலிப்போரே இச் சீர்கேட்டிற்குப் பாத்திரவாளிகளாவர். சுயநலத்தை மேற்கொண்ட இக்கோயிலின் ஆதீனகர்த்தர்கள் அதனைத் தமது சொந்தப் பொருளென வாதாடிப் பொதுமக்களைப் புறக்கணித்து விட்டுள்ளார். இவ்வாலயத்தை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டுமெனச் செய்யும் ஊக்க வினைகட்கும் இடையூறுபுரிந்து வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான புண்ணிய சீலர்களால் ஆக்கப்பெற்ற இவ்வாலயத்தையும் அதற்குச் சொந்தமான நிலங்களையும், ஆபரணங்களையும், மற்றைய உபகரணங்கள் யாவற்றையும் தம்முடைய சொந்தமென வாதாடும் ஆதீனகர்த்தர்களது குறுகிய நோக்கம் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்குப் பெரிய இடையூறாகவிருக்கின்றது. இவ்வாலயத்தைத் தமது சொந்தமென வாதாடும் ஆதீனகர்த்தர்களின் சொந்தப் பொருளில் ஒரு சிறு பகுதியாவது இக்கோயிலின் ஆஸ்தியில் எப்பொழுதாவது சேர்க்கப்படவில்லை என்பது சைவமக்கள் பிரதானமாக அறியவேண்டிய விஷயம். ஆதீனகர்த்தர்களாகவும் பூசகர்களாகவும் அமர்ந்து, இக்கோயிலில் நடக்குங் கிரியைகளை ஓம்பும் உரிமையும் பொறுப்பும் இவர்கட்கு உண்டேயன்றி, இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமதியான இக்கோயிலைத் தமது சொந்தமாக்கும் உரிமை இவர்கட்குச் சிறிதாவது கிடையாது.

முற்றுப்பெறாத திருப்பணிகளும் வேறு அநேக அவசிய செலவுகளும் இவ்வாலயத்துக்குளதாக, இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தர்கள், இக் கோயிலின் வருவாயைப் பொதுசனங்களின் விருப்பத்துக்கு மாறான வழிகளிற் செலவிடுகின்றனர். இக்கோயிலுக்குச் சொந்தமான சில தர்ம நிலங்களை விற்றுவிட்டனர். வேறு சில நிலங்களை விற்க முயற்சி செய்கின்றனர். இதனை யாராவது கண்டிப்பின், பொதுமக்கட்கு இவ்வாலயத்தில் உரிமைகிடையாதென்றும், கோயிலும் அதைச் சேர்ந்த அசைவுள்ள அசைவற்ற பொருட்கள் யாவும் தமக்குச் சொந்தமெனவும் வாதாடுகின்றார்கள். அத்துடன் நில்லாது தமது சொந்த உரிமையென்பதை உறுதிப்படுத்துவதற்கு உறுதி சாதனங்கள் பிறப்பித்து அத்தாட்சிப்படுத்தவும் முயற்சிகள் ஆரம்பித்துள்ளார்கள். இவர்கள் ஆலயம் தமது சொந்தமென நீதிமன்றத்தில் வாதாடுவதுபற்றி ஆதனங்கட்குத் தத்துவம் எடுக்குங் காலத்தில் கட்டும்பூதல்வரிப் பணத்தைக் (Estate Duty) கட்டும்படி அரசினர் நெருக்குகின்றார்கள்.

பல்லாயிரக்கணக்கான சைவமக்களின் பொருளைக்கொண்டு பொது ஆலயம் என்னும் நம்பிக்கையுடன் அமைக்கப்பெற்று, தலைமுறை - தலைமுறையாகப் பொதுமக்களால் ஆதரிக்கப்பெற்று வரும் இக் கோயிலைத் தமது சொந்தமென உறுதி சாதனங்களால் அத்தாட்சிப்படுத்த முயலும் இவர்கள், வரி கட்டவேண்டிய நெருக்கடியைத் தமது சொந்தப்பணத்தால் தீர்த்துக் கொள்வார்களா? அல்லது [illegible] வாய்ச் சொல்லால் மயக்கி, இன்னும் உங்கள் பணத்தையே எதிர் பார்ப்பார்களா? இதனைச் சிந்தியுங்கள்.

சைவஅன்பர்களே! நீங்கள் இப் பூதல்வரிப்பண நெருக்கடியைத் தீராவிடுவீரேல், திருப்பணிகட்கென மூலதனமாக முன்னோரால் விடப்பட்ட நிலங்களை விற்று இந் நெருக்கடியைத் தீர்க்க இவ்வாதீன கர்த்தர்கள் தீர்மானித்துள்ளார்கள். எத்தனையோ திருப்பணிகள் நிறைவேற்றப்படவேண்டியிருக்க, இவ்வாலயத்தை இவர்கள் சொந்தமாகக் கருதி அரசினர்க்குப் பெருந்தொகை பூதல் வரியைக் கட்ட முயல்வது எவ்வளவு நட்டமும் வெட்கமுமாகும். வரிப்பணங் கொடுத்தற்பொருட்டு இவர்கள் விற்குங் கோயில் நிலங்களை சைவநன்மக்கள் வாங்காதுவிடுவதும், விற்கவிடாது தடுப்பதும் அவசிய கடமைகளாகும். இச்சமயத்தில் அறிவும், ஆற்றலும், பரோபகாரமும், தெய்வபக்தியும் நிரம்பப்பெற்ற அன்பர்களின் தொண்டினை இவ்வாலயம் வேண்டி நிற்கின்றது. செவ்வியமுறையில் தெய்வ சாந்நித்தியத்தை விளக்கும் சைவப் பணியாளர்களே இச் சந்தர்ப்பத்தில் நன்மையைச் செய்யக்கூடியவர்.

இந்தக் கோயிலையும் அதற்கென வமைந்த மூலதனங்களையும், பராமரிப்புக்காரர்களையும் நியாயமானதும் தெய்வ சம்மதமானவுமான ஒழுங்கிற்குக் கொண்டுவரவேண்டும். இவ்வாலயம் நன்னிலையை அடையவேண்டின் சுயநலத்தை மாத்திரங் கருதும் ஆதீனகர்த்தர்களது கையினின்று அது நீங்கிப் பொதுநலப்பணியும் விரிந்த அறிவும் பரந்த நோக்குமுடைய பெரியோரின் மேற்பார்வையில் வைக்கப்படவேண்டும். சைவாபிமானிகள் யாவரும் இந்த அரிய தொண்டினைச் செய்து முடிக்க ஒத்துழைக்குமாறு சண்முகநாதப் பெருமானை வேண்டுகின்றோம்.

சைவமக்கள் வேண்டுகோட்படி
**சண்முகானந்த சுவாமி**

## வித்தியாபகுதியினர்

சென்ற தை மாதத்தில் வெளிவந்த இலங்கை வித்தியாபோதினியில் கீழ்மாகாணத்திலுள்ள சில அரசினர் தமிழ்ப் பாடசாலைகளில் தலைமை யாசிரியர்களுக்குரிய இடங்கள் காலியாக இருப்பதாகவும் அந்த இடங்களுக்குக் கீழ்மாகாணத் தமிழர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாமென்றும் வித்தியாபகுதியினர் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கின்றனர். இந்த விளம்பரம் நியாயமற்றதென்பதை நடுநின்றாராய்வார் யாவரும் நன்கு அறிவர். மக்களின் பொதுப்பணத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் குறித்த அரசினர் பாடசாலைகளில் தலைமையாசிரியர்களை நியமிக்கும் விஷயத்தில் வித்தியாபகுதியினர் கீழ்மாகாணத் தமிழர், வடமாகாணத் தமிழர் என்ற வித்தியாசத்தைப் பாராட்டுவதன் மர்மம் என்னவோ? "நித்திரை செய்கின்ற பொழுதுங் கூட நீதித்தராசைக் கையிற் பிடித்துக் கொண்டிருக்கின்றோம்; சாதி, மதம், மொழி மாகாணம் முதலிய வேற்றுமைகளைக் கருதாது எல்லோரையும் ஒப்பவே நோக்குகின்றோம்" என்று பிரசங்கஞ் செய்கின்ற வித்தியாபகுதியினர் ஒரு மாகாணத்துக்கொரு நீதி வழங்குதல் அழகான செயலாகுமா? ஒருவேளை அவர்களுடைய அகராதியில் நீதி என்ற சொல்லுக்கு இருவேறு கருத்துக்கள் இருக்கின்றனபோலும்!

தபாற்கந்தோர், புகையிரதஸ்தானம், அரசினர் பாடசாலை, அரசினர் வைத்தியசாலை, நகர் காவலர் ஸ்தானம் முதலியன அரசினர் பொது ஸ்தாபனங்களாகும். இந்த ஸ்தாபனங்கள் பொதுப்பணத்திலேயே நடைபெற்றுவருகின்றன, இவைகளில் ஒரு மாகாணத்தவர்களுக்குக் கூடிய உரிமையும், இன்னொரு மாகாணத்தவர்களுக்குக் குறைந்த உரிமையும் இல்லை. அன்றியும் 'கிளறிக்கல்' உத்தியோகம், பொலிஸ் உத்தியோகம், அரசினர் பாடசாலை ஆசிரியர் உத்தியோகம் முதலாயின எல்லார்க்கும் பொதுவான உத்தியோகங்களாகும். இந்த உத்தியோகங்களைப் பெறுவதற்கு இன்ன இன்ன மாகாணத்தினர் உரிமையுடையவர்கள், இன்ன இன்னமாகாணத்தினர் உரிமையற்றவர்கள் என்றநியதி யாண்டும் இல்லை. எந்தமாகாணத்தவராக இருப்பினுஞ் சரி, தகுதியுடையோர் மேற்படி உத்தியோகங்களைப் பெறுவதற்கு உரிமையுண்டு. இவ்விதமிருந்தும் அரசாங்கசபைப் பிரதிநிதிகள் சிலரின் சொற்களைச் சாட்டாக வைத்துக்கொண்டு ஒரு மாகாணத்தவரைத் திருத்திப்படுத்த முற்பட்டு முறைதவறி நடந்து மற்றைய மாகாணத்தவர்களுக்கு அநீதி புரிந்து அவர்களுடைய வெறுப்புக்கு இலக்காதல் வித்தியாபகுதியினருக்கு ஏற்ற செயலாகுமா?

கீழ் மாகாணத்திலுள்ள அரசினர் பாடசாலைகளிற் கீழ்மாகாணத்தவர்களையே தலைமையாசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று அம்மாகாணப் பிரதிநிதிகள் வித்தியாபகுதியிரை நெருக்கினால், சைவவித்தியா விருத்திச் சங்கத்தினர், பௌத்த பிரமஞான சங்கத்தினர், கத்தோலிக்க சங்கத்தினர் முதலாயினோர் தங்கள் சமயப் பிள்ளைகள் படிப்பதற்காகவும் தாங்கள் விரும்பிய ஆசிரியர்களுக்கு இடங்கொடுப்பதற்காகவும் தங்கள் சொந்தப் பணத்தில் பாடசாலைகளைக்கட்டி நடாத்துவது போல, கீழ்மாகாணப் பிரதிநிதிகளையும் அவர்களுடைய சொந்தப் பணத்தில் பாடசாலைகளைக் கட்டி அவர்கள் விரும்பியவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிடுவதல்லவா வித்தியா பகுதியினரின் கடமையாகும். இதனை விடுத்துப் பொதுஸ்தாபனங்களில் ஒரு மாகாணத்தவர்களுக்குக் கூடிய உரிமையை அளித்தல் பொருத்தமானதா என்பதை வித்தியாபகுதியினர் சிந்தித்துப் பார்ப்பார்களா?

கம்பளை 20-3-46 } **அசேலன்**


இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.



# " நாடோடி "

ஓர் மாதப் புத்தகம்

பதிப்பாசிரியர்: திரு. " நாடோடி "

13-4-46ல் வெளிவருகின்றது.

**தனிப் புத்தகம் விலை ரூபா 1/-**
**12 புத்தகம் விலை ரூபா 12/-**

12 புத்தகங்கட்கு முற்பணம் அனுப்பின் தபாற் செலவின்றி ஒவ்வொரு மாதமும் புத்தகம் அனுப்பப்படும்.

ஏஜன்சி விபரங்கட்கு எழுதுக:

S. S. சண்முகநாதன் அன் சன்ஸ்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

[2686]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறு கதை

# தியாகம்

'சரஸ்வதி தாஸன்'

ஹுசேயின் ஆங்கிலம் எட்டாவது வகுப்புவரை படித்தவன். கடையொன்றில் எழுத்துவேலை செய்துகொண்டிருந்தான். தாய் தந்தையரை இழந்தவன். தனது மாமனார் வீட்டிலேயே வாழ்ந்து வந்தான். ஒரு புகையிரத வீதிவழியாகவே காலையிலும் மாலையிலும் நடந்து செல்வான். அங்குள்ள சேலம்பாலத்தைக் காணும்போது அன்றொருநாள் நிகழ்ந்த வெள்ளப்பெருக்கு உள்ளத்தில் உதியாது விடுவதில்லை. இப்படிப் பல மாதங்கள் கழிந்துவிட்டன.

ஒருநாட்காலை 8 மணியிருக்கும். அதே பழைய மணல் மேட்டில் பெண் ஒருத்தி விறகு வெட்டிக்கொண்டு நிற்கிறாள். ஹுசேயினும் அங்கு வருகின்றான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். அப்பெண் யாருமில்லை, ஹுசேயினால் காப்பாற்றப்பட்ட பழைய சித்திதான். சித்தியோ நாணத்தினால் தலையைக் குனிந்துகொண்டாள். ஹுசேயினும் வெட்கங்கொண்டானாயினும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. "எப்படி? சுகந்தானே?" என்றான் சித்தியைப் பார்த்து; "சகலரும் சுகமே இருக்கிறோம்" என்றாள் சித்தி. இந்த இனிமையான பதிலை ஹுசேயின் எதிர்பார்க்கவே இல்லை. "என் தயவு ஒன்றுமில்லை. அனைத்தும் அல்லா அருளால் நிறைவேறின" என்று கூறி ஹுசேயின் நடக்க ஆரம்பித்தான். ஹுசேயினோ பின்னாற் திரும்பிப் பார்க்க வெட்கங்கொண்டவனாய் மனப் போராட்டத்தோடு நடந்தான். சித்தியோ நாணத்தையும் மறந்து ஹுசேயின் மறையும்வரை கண்ணிமை கொட்டாது வார்த்த சிலைபோல் நின்றாள். ஹுசேயினின் உருவம் மறைந்தது. ஆனால் அவள் உள்ளத்தைவிட்டு ஹுசேயின் அகலவில்லை.

பக்கத்திலே தேயிலைச் செடிக்குள் நின்ற அவள் தங்கை அக்கா என்று கூப்பிட்டதும் சித்தி திடுக்குற்றுவிட்டாள். அன்று தொடக்கம் சித்தியும் ஹுசேயினும் சந்தித்துச் சம்பாஷித்தல் சாதாரண விஷயமாகிவிட்டது. காதலர் இருவரையுங் கால்வாய் ஒன்றுதானே பிரித்துவைத்தது?

எனக்கு உயிர் கொடுத்தவர் அவரே. ஆனபடியால் இவ்வுலகில் எனக்குத் தெய்வம் அவரன்றி வேறொருவர் இருக்க முடியாது என்பது சித்தியின் நம்பிக்கை. எனது சீவியத்தில் ஒரு பெண்ணைக் கையாற்றொட்டுக் கண்ணாற் பேசி என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்ட சித்தியைத் தவிர இனிமேல் எனக்கொரு பெண்தெய்வம் இருக்கமுடியாதென்பது ஹுசேயின் சித்தாந்தம். ஆனால் இதுவரை அவர்களிருவரும் இதைப்பற்றி வேறு எவருடனும் பேசியது கிடையாது.

1942-ம் ஆண்டு ஏப்பிரல்மாதம் யப்பான்காரன் கொழும்பிற் குண்டுபோட்டான். இலங்கையிற் படைக்கு ஆள் சேர்த்தனர். ஹுசேயினும் படையிற் சேர எண்ணங்கொண்டான். தன் விருப்பத்தை மாமனார்க்கு மாத்திரம் தெரிவித்து உத்தரவுபெற்றுக் கொண்டான். அதே வருடம் மே மாதம் 23-ந் திகதி காலை 8 மணிக்குச் சேலம்பாலத்தில் ஹுசேயின் வந்துகொண்டிருக்கிறான். மணல்மேட்டில் ஓர் உருவம் ஹுசேயினைக் கண்டுங் காணாதது போல் நிற்கிறது. அவன் அன்றுதான் அவளைப் பெயர் சொல்லி அழைக்கிறான். எப்போதுமே சாரத்துடன் காட்சியளித்த ஹுசேயின் அன்று காற்சட்டையுடன் காட்சியளித்தவுடனே சித்தியின் மனதில் ஏதோ ஒரு பரபரப்பு ஏற்பட்டது. நீங்கள் எப்போது திரும்புவீர்கள் என்றாள். நிச்சயமாகச் சொல்வதற்கில்லை யென்றான் ஹுசேயின். உங்களுயிர் இவ்வுடலிலேதங்கி இன்றோடொரு வருடமும் ஒருநாளும் ஆகிறது என்றாள் சித்தி. இவ்வன்பான வார்த்தைகள் ஹுசேயினின் கண்களை நீரால் நிறைத்துவிட்டன. ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனாற் சொற்கள் வரவில்லை. திரும்பிப்பார்த்தான்; மாமனார் அவனைப் பயணம் அனுப்ப வந்துகொண்டிருந்தார். உடனே ஹுசேயின் நடையைத் துரிதமாக்கினான். நாட்கள் சென்றுவிட்டன. சித்தியின் மனத்திற்கு இரம்மியத்தைக் கொடுத்த மணல்மேட்டு இப்பொழுதுவெறும் பாலைவனமாகக் காட்சியளித்தது. முன்பு மாமரத்தில் இருந்து பெடையை அழைத்த ஆண்குயிலின் குரல் சித்தியின் மனத்திற்கு எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்தது. இப்போது அதே குயிலின் குரல் ஆந்தையின் அலறல்போற் கேட்கின்றது. மலர்ந்த பூக்களுடன் காட்சியளித்த ரோசாச் செடிகள் இப்போது நாக உலகத்து முள்ளுவேலிகளாகத் தோன்றின. ஏதோ ஒன்று தன் மனத்துள்ளே இருந்து பறந்துவிட்டதாக உணர்ந்தாள் சித்தி.

சித்தி வயது வந்த பெண்ணல்லவா? வீட்டிற் பெற்றோர்க்குக் கலியாணக் கவலை உண்டாயிற்று. சித்தியின் உள்ளத்தை யாரறிவார். சித்தியின் மைத்துனன் காதருக்குப் பெற்றோர் பெண் கொடுப்பதாகச் சம்மதி கொடுத்துவிட்டனர். சித்திக்கு இவ்விஷயம் பெருந்துயரை உண்டாக்கியது. காதரை மணக்க அவள் மறுத்துவிட்டாள்.

சித்தியின் பிடிவாதத்தைக் கண்ட தாயுந் தந்தையுங் காதரின் பெற்றோருக்கு விஷயத்தைத் தெரிவித்து அவர்களை வேறு எங்காவது பெண் பார்க்கும்படி சொன்னார்கள்.

ஹுசேயினின் மாமனாரிடம் ஹுசேயினின் விவாகத்தைப்பற்றிப் பலர் பிரஸ்தாபித்தனர். ஹுசேயினுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுப்பதாகவே அனேகர் முன்வந்தனர். ஹுசேயினின் மாமனாரோ தனது தம்பியாரின் மகள் ரூபிலாவையே மனதில் நிச்சயித்திருந்தார். ரூபிலா பெயருக்கேற்ற அழகும் அழகிற்கேற்ற குணமும் உடையவள். இதுவே ஹுசேயினின் மாமனார் மனதைப் பெரிதுங் கவர்ந்தது. அவர் வேறு விவாக ஒழுங்குகளைத்தட்டிவிட்டார்.

ஹுசேயின் திரிகோணமலைக்குப் போய் வருடம் ஒன்றாகிவிட்டது. ஒரு கிழமை விடுமுறையில் வீட்டிற்கு வந்தான். வந்த அன்றே மாமனார் கலியாணப் பேச்சை ஆரம்பித்தார்.

"நான் இப்போதைக்கு விவாகம் செய்யப் போவதில்லை" யென்றான் ஹுசேயின்.

"எனக்கோ வயதாகிவிட்டது. நான் உயிரோடு இருக்கும்போதே உனக்குக் கலியாணஞ் செய்துபார்க்கவேண்டும்" என்றார் மாமனார்.

"அப்படியானால் நீங்கள் சொல்லும் பெண்ணை நான் கட்டமுடியாது."

"நீயே பெண் பார்த்துவைத்திருக்கிறாய் போலிருக்கிறதே."

"ஆம். ஆற்றங்கரைச் சித்தியைத்தான் மணம் முடிப்பதாகத் தீர்மானித்துவிட்டேன்."

"காரியம் அவ்வளவுக்கு வந்துவிட்டதா?"

"ஆம், என் உயிர் இவ்வுடலில் இருக்கும்வரை சித்தியைத் தவிர வேறு பெண்ணை நான் விவாகம் செய்யப்போவதில்லை."

"சித்தி மறுத்துவிட்டால்"

"பிரம்மசாரியாகவே காலங் கழிப்பேன்"

ஹுசேயின் அடுத்தநாள் பாலத்தை நோக்கிநடந்தான். பாலத்தின் பக்கத்தே உள்ள கல்லின் மேற் காக்கி உடையுடன் ஒரு மணித்தியாலம்வரை உட்கார்ந்திருந்தான். சித்தியின் தங்கை மணல்மேட்டிற்கு வந்தாள். ஹுசேயினைக் கண்டாள். ஓடோடியுஞ் சென்று சித்திக்குச் சொன்னாள். சித்தியுந் தங்கையும கப் பழைய மணல் மேட்டிற்கே வந்தனர். ஹுசேயினின் தோற்றம் சித்திக்குப் புதிதாக விருந்தது. ஹுசேயினுக்கும் சித்தி புதிய [illegible]ர்அழகுபெற்றிருப்பதாகத்தெரிந்தது. இருவரும் சம்பாஷிக்க ஆரம்பித்தனர். "சித்தி இன்னும் 2, 3 மாசத்தில் நான் இலங்கையை விட்டுப் போகவேண்டும். திரும்பி வர 3 வருடமாவது பிடிக்கும். நீ அவ்வளவு காலமும் காத்திருப்பாயா?"

"இந்த உயிர் உங்களுடையது. சீவியகாலம் முழுவதுமே காத்திருக்கவும் தயார்."

"மாமா எனக்கு வேறு கலியாணங்கள் எல்லாம் பேசினார். நானோ இப்போ விவாகஞ் செய்வதில்லையென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்."

"எனக்கும் வீட்டில் எவ்வளவோ கஷ்டங்கள் நேர்ந்தன. அம்மாவின் அன்பினால் அவையெல்லாம் ஒருவாறு நீங்கிப்போய்விட்டன."

"சித்தி காதலர் பாடு கஷ்டமானது. காதலுக்காக அநேகர் தமது உயிரையே துறந்திருக்கிறார்கள். சென்ற கிழமைப் பத்திரிகையில் யாழ்ப்பாணச் செய்தி ஒன்றைப் படித்தேன். இரண்டு காதலர் விவாகம் செய்துகொள்வது அவர்களுடைய பெற்றோருக்கு விருப்பமில்லையாம். ஆனபடியால் அவர்கள் இருவரும் ஒரே கிணற்றில் விழுந்து உயிர்விட்டனராம். எங்கள் காதலிலும் இன்னும் எவ்வளவு சோதனையிருக்கிறதோ யாரறிவார்?"

"சித்தி உனக்கு ஏதாவது கொண்டுவரலாம் என்று கடையெல்லாந்தேடினேன். மனதிற்குப்பிடித்ததுஒன்றுமே அகப்படவில்லை."

"உங்களிலும் பார்க்க உயர்ந்த பொருள் இவ்வுலகில் எனக்கு இருப்பதாகத் தெரியவில்லை."

"அடேயப்பா இப்படியெல்லாம் சாதுரியமாகப் பேசுவதற்கு யாரிடம் கற்றுக்கொண்டாய்."

"ஏன் உங்களிடம் தான் கற்றுக்கொண்டேன்."

இப்படி இனிமையாகப் பேசிவிட்டுக்காதலரிருவருங் கலைந்தனர்.

மாமனாருக்கு ஹுசேயினின் மனத்தைத் திருப்புவது எப்படியென்று விளங்கவில்லை. கடைசியாகப் பாவம் பழி யெல்லாவற்றையும் ஒரு பக்கத்திலே வைத்துவிட்டுத் தீர்க்கமான முயற்சியில் இறங்கினார்.

ஹுசேயினின் மாமனார் வாரம் ஒருமுறையாவது சித்தியின் வீட்டிற்குப் போகத் தவறுவதில்லை. ஹுசேயினின்மணத்திற்குஇடையூறு இல்லாதவர்போல் நடித்து வந்தார்.

ஹுசேயினின் மாமனார் ஹுசேயினின் பேரில் காணி ஒன்று வாங்குவதற்காக இரண்டு காணிகளைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். அதில் எது விருப்பம் என்று தெரிவிக்கும்படியுங் குறிப்பிட்டிருந்தார். அதற்கு ஹுசேயின் மாமனாருக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு:

சீனன்வாடி
திரிகோணமலை, 15-3-46

அன்பு நிறைந்த மாமா!

அல்லா அருளால் க்ஷேமம். தங்கள் க்ஷேமத்திற்கும் தங்கள் அன்பான கடிதம் கிடைக்கப் பெற்று யாவும் அறிந்தேன். தாங்கள் குறிப்பிட்டபிரகாரம் நான் ஏமாந்து போகிறவனல்லன். நீங்கள்என்னதான்சொன்னாலும் ஆற்றங்கரைப் பக்கத்து விஷயம் என் மனத்திற்குப் பிடிக்கவில்லை. அது ஒரு தனித்த இடம். நான் ஏமாந்து போவேன் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள். அவர்களுடைய சூழ்ச்சியெல்லாம் எனக்குத் தெரியும். அந்த விஷயமாக நீங்கள் ஏதைச் சொன்னாலும் நான் கேட்க மாட்டேன். அதில் நான் நன்றாகப் பட்டுப் பழுத்துவிட்டேன். எனக்காகத்தான் நம்பி வைத்திருந்தவர்கள் என்றால் யாரைக்கேட்டு வைத்திருந்தார்கள். ஏதோ என்னைக கண் மூடிக்கொண்டு விழும்படி சொல்லுகிறார்கள் போலிருக்கிறது. நீங்கள் முன்பு கூறினீர்களே அதை ஒழுங்கு செய்யுங்கள். நான் எப்படியும் 1-ம் திகதியளவில் எகிப்துக்குப் போக எண்ணம். அதற்கிடையில் உவ்விடம் வந்து எழுத்தை முடித்துவிட்டுப் போகலாம் என உத்தேசம். மற்றவையெல்லாம் பின்பு பார்த்துக்கொள்வோம். ஆற்றங்கரையாரிடம் நான் முற்றாக மறுத்துவிட்டதாகவும் எனக்காகக் காத்து வைத்திருக்க வேண்டாம் எனவுங் கூறுங்கள்.

தங்களன்புள்ள
ஹுசேயின்

கடிதத்தை வாசித்துப் பார்த்தார் மாமனார். தன் யுக்தி பலித்தது என்று மனதார மகிழ்ந்தார். உடனே கடிதத்துடன் சித்தி வீடு நோக்கிநடந்தார். ஹுசேயினின் கல்யாண விஷயமாகப் பேச ஆரம்பித்தார். நான் ஒருகடிதம் எழுதினேன். ஏதோ இந்த மாசமாவது லீவில் வந்து கலியாண எழுத்தை முடித்துவிட்டுப்போ. என்னுயிர் இருக்கும்போது சித்தியையும் உன்னையும் ஒருமிக்க இருத்திப் பார்க்கவேண்டுமே என்று ஆவலோடு எழுதினேன். அதற்கு அவன் எழுதிய மறுமொழி என் வயிற்றிலே நெருப்பைக் கொட்டினதுபோல் இருக்கிறதே. சித்தி இந்தா இதோ கடிதத்தைப் பார் என்று சொல்லிச் சித்தியிடங் கடிதத்தை நீட்டினார். கடிதத்தைப் படித்து முடிக்கமுன் சித்தியின் கன்னத்தைக்கண்ணீர்நனைத்தது.

2[illegible]-ந் திகதி காலை 9 மணியளவில் தந்தியொன்று ஹுசேயினின் மாமனாருக்குக் கிடைத்தது. அதிற் ஹுசேயின் அன்று வருவதாகக் கண்டிருந்தது. மாமனார் தந்தியைக் கையில் எடுத்துக்கொண்டு சித்திவீட்டுக்குச் சென்று விஷயத்தைத் தெரிவித்தார்.

சித்திக்குஎங்கிருந்தோபுதுப்பெலம் வந்துவிட்டது. தங்கையையுங் கூட்டிச் சென்று தேயிலைச் செடியில் மறைந்து இருந்தாள். ஹுசேயினும் மாமனாரும் ஆனந்தமாகப் பேசிக்கொண்டே வருகின்றனர். மணல்மேட்டிற்கு அருகாமையில் வரும்போது மாமனார் கேட்ட கேள்வியொன்றிற்கு ஹுசேயின், "மாமா நீங்கள்மாத்திரம் இந்த விஷயத்தில் அவர்களுக்காகப் பரிந்து பேசவேண்டாம். எல்லா விஷயங்களையும் நான் என் கண்ணாரக்கண்டுதான் அதுவேண்டாமென்று கடிதம் எழுதினேன். என்னை அவர்கள் கொண்டுபோய் மாட்ட இருப்பதைப் பற்றிக் காதர் கடிதம் எழுதியிருந்தான். நீங்கள் இன்று 5 மணிக்கே எழுத்திற்கு ஆயத்தஞ் செய்யுங்க[illegible] நான் நாளை புறப்பட வேண்[illegible]

அவ்வார்த்தைகள் [illegible]றும் சித்தியின இதயத்தை வாள்கொண்டு உறுத்தின. "ஆண்களையும் நம்பலாமா? அவரை நான் அல்லவாநம்பிமோசம்போனேன்" என்றெல்லாம் மனத்துடன் போராடினாள். அவள் தங்கையை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஆழ்ந்த யோசனையில் ஆற்றங்கரையோரத்தில் இருந்தாள்.

மாலைப்பொழுதாகிவிட்டது. மணல்மேட்டைநோக்கிக் ஹுசேயின் சென்றான். ஆற்றங்கரையிற்கூடிய ஜனங்கள் பேசிய பேச்சுக்கள் அவனது உள்ளத்தை உடைத்தன. கரைபுரண்டோடும் ஆற்றுடன் முணுமுணுத்தவண்ணம் ஹுசேயின் காணப்பட்டான்.

மறுநாட்காலை சேலம் பாலத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கும் குறுக்கோயாப் பாலத்தினருகில் இரு பிரேதங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஊர் எங்கும் ஒரே கதை. கங்கையில் மலர்ந்த காதல் கங்கையில் உதிர்ந்துவிட்டதெனச் சிலர் பேசிக்கொண்டனர். அன்று வீட்டைவிட்டு வெளிக்கிளம்பிய ஹுசேயினின் மாமனார் எங்கு சென்றாரோ தெரியவில்லை. அவர் பக்கிரியாகப் போய்விட்டார் என்று சிலர் கூறுகின்றனர். பைத்தியம் பிடித்து அலைகிறார் என்றும் வேறு சிலர் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

INDIAN BOOK DEPOT,
IRUPALAI, :: KOPAY
ஆசிரியர் கலாசாலைகட்கும் மற்றும் ஆங்கில தமிழ்க் கலாசாலைகட்கும் வேண்டிய புத்தகங்கள் பெறற்பாலன.
கந்தையா அப்பையா,
மனேஜர்,
இந்திய புஸ்தகசாலை,
இருபாலை, :: கோப்பாய்
[2688]

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.
COLOMBO

இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

மைவகைகள்
மை எண்ணெய்
வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்ரி ரோட் :: யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62
[2658]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday March, 24, 1946 | No. 34

நற்சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2660]

## 221-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

இறக்குமதி செய்யும் மொத்த வியாபாரிகள், அமெரிக்கன் புடவைக் பங்கீட்டு வியாபாரிகள், வெளி ஊர் மொத்தப் பங்கீட்டு வியாபாரிகள் உட்பட எல்லா மொத்த வியாபாரிகளும் 1946-ம் ஆண்டு மாச் மாதம் 11-ந் திகதி செல்லுபடியாகத்துவங்கிய புதிய உபயோகிப்பவர்களின் கூப்பன்கள் ஒப்படைக்குமிடத்து 1946-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் திகதி வரையும் மொத்தக் கையிருப்பிலிருந்து புடவை எடுக்கவிடப்படாது என இத்தாலறிவுறுத்தப் படுகின்றனர். அத்திகதிவரையும் 200-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தலுக்கு இணங்க எனதுஅலுவலதிகாரிகளின் அதிகாரமுடைய பழைய உபயோகிப்பவரின் கூப்பனைச் சமர்ப்பிக்கப்படின் மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிக்கு விற்கவோ, தனது சில்லறை வியாபாரத்துக்கு மாற்றவோ கூடும்.

2. 218-வது புடவைக்கட்டுப்பாட்டறிவித்தலின்படி பழைய உபயோகிப்பவர் கூப்பன் சில்லறை வியாபாரிகளால் புடவை கொள்முதல் செய்ய மாச்மாதம் 30-ந்திகதி வரையுமே செல்லும். ஆகையால் அவர்கள் பழைய கூப்பன்களைப் பயன்படுத்தத் தக்கவண்ணம் இவ் விளக்கங்கள் [illegible]க்கப்படுகிறது.

English : ஜெரூட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 13-3-46 [2683]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 164 Testy

நுணுவில் கிழக்கு,

வேலுப்பிள்ளை கந்தையா பெண் காலஞ்சென்ற செல்லம்மாவின் ஆஸ்தியின் பேரில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 164-ம் இலக்க தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1946-ம் ஆண்டு சித்திரை (ஏப்ரல்) மாதம் 15-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குளிக் கோவிற்பற்று நுணுவிலிறை வல்வெட்டித் திடல் வயல் நெற்பரப்பு 18-ம் வல்வெட்டித் திடல் வயல் நெற்பரப்பு 22ம் மாவிலங்கம் திடல் வயல் நெற்பரப்பு 3-ம் ஒருங்கு சேர்ந்து நெற்பரப்பு நாற்பத்திமூன்று (43-ம்) எல்லை கிழக்கு கே. விசுவலிங்கத்தின் ஆதனம். வடக்கு எம். சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கே. கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு கே. விசுவலிங்கத்தின் ஆதனம். இதடங்கலும்.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை 18-3-46

## 222-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### பருத்தி 'செகன்ட்ஸ்' (Seconds)

147-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தலின் 3-ம் பந்தியில் 'செகன்ட்ஸ்' பங்கீட்டுத் திட்டத்துக்குப் புறம்பே விற்கப்பட அளிக்கப்பட்ட அனுமதி மீட்கப்பட்டுளது. இன்று துவக்கம் வியாபாரிகள் கைவசமுள்ள செகன்ட்ஸ் யாவும், கூப்பன் இல்லையென்று அடையாளம் இடப்படாதிருந்தால், கூப்பனுக்கு விற்கப்படலாம்.

2. அதற்கு இயைய இறக்குமதியாளர் எல்லாருடையவும் கூப்பன் கணக்கும் சரிக்கட்டப்படவேண்டும்.

ஈ. ஜெரூட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு, 14-3-1946. [2684]

## புதிய பிறக்ரர்

வடமராட்சியிலுள்ள பிரபல வழக்கறிஞர் ஞடும்பநதைச் சேர்ந்த திரு. இ. நவரத்தினம் அவர்கள் இம்மாதம் 14-ந்திகதி சுப்ரீங் கோட்டுப் பிறக்ரர் ஆகச் சேர்க்கப்பட்டார். இவர் புலோலி தம்பசிட்டியூர் காலஞ்சென்ற அப்புக்காத்து மு. இராசரத்தினத்தின் புதல்வர் ஆவர்.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளவும்.

S. கனகசபை
சிறுப்பர்

(2651)

## சிலப்பதிகாரக் காப்பிய இலக்கணம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்கியிருப்பதோடு வாழ்த்துமுதலியவற்றிலும் வரலாற்றை உள்ளவாறு கூறி முடிப்பதிலும் தனித்த சிறப்புடையதென்பது அறியத்தக்கது.

இக் காப்பியம் முப்பது பாடல்களையுடையது. ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் கட்டுரை யென்னும் தலைப்பில் அக் காண்டம் நுதலிய பொருள்களும் அதன் கண் அமைந்த இயலிசை நாடகப் பகுதிகள் இன்ன வென்பதும் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன. நூன் முடிவில் நூற் கட்டுரை யொன்றுள்ளது, அதன் கண்,

"தெரிவுறு வகையாற்
செந்தமிழியற்கையில்
ஆடிநன் னிழலி னீடிருங்
குன்றங்
காட்டுவார் போற் கருத்து
வெளிப்படுத்து
மணிமேகலை மேல் உரைப்
பொருண்முற்றிய
சிலப்பதிகாரம் முற்றும்"

என்று கூறப்பட்டுளது. ஒரு சிறிய கண்ணாடியில் பெரிய மலையின் மூழு உருவத்தையும் அடக்கிக் காட்டுதல் போல விரிந்த கருத்துக்களைச் சுருங்கிய பாடல் அடிகளில் ஆசிரியர் அடக்கிக் காட்டியுள்ளார் என்னும் இது உண்மையே, இதற்கு எடுத்துக் காட்டாகப் பல செய்திகளை இக் காப்பியத்தில் அறியலாம்.

இங்ஙனம் முத்தமிழ் நலமும் செறிந்த வித்தகக் காப்பியம் இச் சிலப்பதிகாரமாதலின் இது தமிழ் இலக்கியங்களுள் தலை மணியாக விளங்குகிறது.

திருச்சி வானொலியிற் பேசியது.

## ஆசிரிய பரீட்சை வரைதல் வகுப்பு

ஆவணி 1946

மேற்சொல்லப்பட்ட பரீட்சைக்கு வரைதலை ஓர் பாடமாக எடுக்கும் ஆசிரியர்களுக்கு உதவி செய்யும் நோக்கமாக உவின்சர் சித்திரக் கழகம் (Winzer Art Club) கோப்பாயில், சனிக்கிழமைதோறும் பிற்பகல் ஒன்றரை மணி தொடக்கம், (போதிய ஆசிரியர் சேர்வரேல்) ஓர் வகுப்பு நடாத்த உத்தேசித்துள்ளது. அவ்வகுப்பிற் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் 31-3-46க்கு முன் ஒரு ரூபா பிரவேசப் பணத்துடன் எமக்கு மனுப்பண்ணிக்கொள்ளவும்.

காரியதரிசி
உவின்சர் சித்திரக் கழகம்,
கோப்பாய்

[2689]

## 223-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### இறக்குமதியாக்கப்பட்ட பெனியன்கள்

12-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை இந்தியாவிலிருந்து இறக்கப்படும் பெனியன்களுக்குமாத்திரம் உரியதென்பதைப் பொதுமக்களுக்கு இத்தாலறியத் தருகிறேம். ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்து இறக்கப்படும் உட்சட்டைகள் பெனியன்கள் கொள்முதல் விலையிலும் 32% ஏற்றி விற்கப்படலாம்.

ஈ. ஜெரூட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி.

கொழும்பு, 14-3-1946. [2685]

## வடமராட்சி நெற்பயிரிடுவோர் சங்கம்

பருத்தித்துறையிலுள்ள இச் சங்கத்தின் சார்பாக ஸ்ரீமான்கள் S. H. பேரின்பநாயகம், S. மகாதேவன், R. சிவபாதசுந்தரம், S. நடேசன் M. Sc. ஆதியோர் இம்மாதம் 13-ந் திகதி விவசாயமந்திரி அவர்களைக் கண்டு யாழ்ப்பாணத்தில் நெற்பயிரிடுவோரின் தேவைகளை எடுத்துக்காட்டினர். அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலுமுள்ள யந்திர ஸ்தாபனங்களுக்குக் கடிதம் எழுதி விபரங்களறிந்து யாழ்ப்பாணத்துக்குக் குழாய்மூலம் நீர்ப்பாய்ச்சும் வசதிகள் செய்வதாக மந்திரி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஏரியைச் சீர்ப்படுத்தும் முயற்சி விரைவில் நடைபெறுமென்றும் மந்திரி அவர்கள் அறிவித்துள்ளார் என மேற்படி சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றூர்.

## அறிவுப் போட்டி இல. 3

பரிசு ரூ. 1000-00

முடிவு தேதி 9-4-46

பிரவேசக் கட்டணம்

1 கூப்பன் அனுப்புவதற்கு 50 சதம்

4 கூப்பன்கள் அனுப்பினுல் ஒரு கூப்பன் பிரவேசக் கட்டணமின்றி யனுப்பலாம்.

"போட்டி ஆசிரியர்"
அறிவு நிலையம்
69/2 இராசவீதி
கண்டி

[2690]

## திரிகோணமலை இந்துவாலிப சங்கம்

திரிகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுகிழமை பிற்பகல் திரிகோணமலைப்பகுதி நீதிபதியவர்கள் திரு. P. ஸ்ரீஸ்கந்தராசாவின் தலைமையில் ஒரு சபை கூடிற்று.

"திரிகோணமலை பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இங்கு கன்னியாவிலுள்ள வெந்நீரூற்றுக்கள் மிகவும் சிறந்தன. ஆனுல் இவை இருக்கும் நிலை மிகவும் வெட்கத்துக்குரிய காரியமாயிருக்கின்றது. இந்து சமயத்தவர்கள் கவனியாதிருப்பது பெருந் தவறு. மேலே சொல்லப்பட்ட துறைகளில் உழைப்பதற்கு ஒரு சபை அவசியம் வேண்டும். அச்சபையில் அங்கத்துவம்வகிப்பவர்கள்மேலான கொள்கையும் சுயநலமற்றதன்மையும் உடையவர்களாயிருத்தல் வேண்டும், எக்காரணம் பற்றியும் அரசியல் விஷயங்களில்இச்சபைதலையிடக்கூடாது" எனத் தலைவர் குறிப்பிட்டார்.

பின் சபைக்குத் திரிகோணமலை இந்து வாலிப சங்கம் எனப் பெயரிட்டு அதற்குத் தலைவராக 'உயர்' திரு. நடராஜானந்தா சுவாமியும் உபதலைவராக திரு. வே. கணபதிப்பிள்ளையும் காரியதரிசிகளாக திரு. கோ.இராஜகோபாலும், திரு. ஐ. சரவணமூத்து ஆசிரியரும் பொக்கிஷாதிபராக திரு. இராஜவரோதயமும் இன்னும் பன்னிரண்டு நிர்வாகசபையோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.—கடிதம்.

## பதிற் பரிசோதனைத் தலைவர் இளைப்பாறுகின்றனர்

வரும் ஜூன்மாதம் 1-ந் திகதியோடு பதிற் பரிசோதனைத் தலைவராக 35 வருட காலம் சேவை புரிந்த திரு. K. கனகரத்தினமவர்கள் தமது பதவியினின்றும் இளைப்பாறுவார். இவருக்கு இப்போழுது வயது 54. அரசாங்க லிகிதர் பதவியிலிருந்து தமது பேராற்றலால் இவ்வித உயர்ந்த பதவியை வகித்துள்ளார். இப்பொழுது பரிசோதனைத் தலைவர் பதவிக்கு வெள்ளையர் ஒருவரை இறக்குமதி செய்ய அரசாங்கசபை தீர்மானித்துவிட்டது. இப்பிரேரணை அரசாங்கசபையில் உருவாக்கப்பட்டபோதே திரு. கனகரத்தினமவர்கள் இளைப்பாறுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

## அரசியலும் ஆசிரியர்களும்

16-3-46-ல் கூடிய அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் சுயபாஷா ஆசிரியர்கள் அரசியல் விஷயங்களில் பிரதான பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஆசிரியர்களுடைய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உழைக்கக்கூடியவர்களையே அடுத்து வரும் இலங்கைப்பாராளுமன்றத் தேர்தலில் மூழுமனதுடன் ஆதரிப்பதென்றுதீர்மானிக்கப்பட்டது.

சுய பாஷா ஆசிரியர்களால் பெரிதும் வேண்டப்படுவனவும் உடன் நிறைவேற்றி வைக்கப்படவேண்டியனவுமான விஷயங்களில் பிரதானமானவை பின் வருவன.

1. சுயபாஷைமூலம் எல்லா வகுப்புகளிலும் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படவேண்டும்.

2. சுயபாஷா ஆசிரியர் ஆங்கில ஆசிரியர் என்ற பேதமின்றி ஒரே சம்பளத்திட்டமாயிருக்க வேண்டும்.

3. விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் (Widow and orphan Pension) உபகாரச் சம்பளம் கொடுபடவேண்டும்.

## நாடிப் பரீட்சை நிபுணர்

### யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கிறூர்

சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியர், நாடிப் பரீட்சை நிபுணர், கல்கத்தா ஆயுர்வேதக் கல்லூரியின் மாஸ்டர் இலங்கையில் தீராதிருந்த பற்பல பிணிகளைத் தீர்த்துப் புகழீட்டிய வைத்திய பூபதி V. K. S. செல்லப்பா பிள்ளை M.A.M.S. அவர்கள் இன்று துவக்கம் 30-ந் திகதிவரை யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிரோட் (ஸ்டேஷன்சந்தி) No. 406 அ. தம்பிமுத்து அவர்களின் பங்களாவில் தங்கி இருக்கிறூர்.

### நாடிப் பரீட்சை
### உங்கள் நோய் என்னவென்று அறிந்தீர்களா?

அதனை அறிய நாடிப் பரீட்சை நிபுணர் சிவானந்த சித்தர் வைத்தியரிடம் உங்கள் கைநாடியைப் பரீட்சியுங்கள், உங்கள் நோயை அறிந்து சரியாகச் சொல்லுவார். வியாதி தெரிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகல்வது நிச்சயம். உடனே உங்கள் வைரியாகிய பிணியை அகற்ற சிவானந்த சித்தருடன் கலந்தாலோசியுங்கள். உத்தரவாதத்துடன் நோயைத் தீர்த்துத் தருவார். கரவெட்டியிலிருக்கும் Mr. S. வேலுப்பிள்ளை அவர்கள் சொல்வதைக் கேளுங்கள்:

சி. வேலுப்பிள்ளை
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

நான் அனேக வருஷங்களாக வாதத்தினுல் அவஸ்தைப்பட்டுப் பற்பல மேல்நாட்டு வைத்தியர்களிடமும் இன்னும் ஆயுர்வேத வைத்தியர்களிடமும் வைத்தியம் செய்து தீராதெனக் கைவிட்டு இருக்கும் சமயம் Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A. M. S. அவர்களை யாழ்ப்பாணத்திற் கண்டு மருந்து சாப்பிட்டேன். அவருடைய ஒரே அவுஷதத்தால் எனது வியாதியைப் பிரமிக்கத்தக்க முறையில் சுகப்படுத்திக் கொடுத்தார். எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னைப்போல் வியாதிகளினுற் கஷ்டப்படும் யாவருக்கும் இதைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
சி. வேலுப்பிள்ளை

### சிவானந்த சித்தர் வைத்தியசாலை

ஹெட் ஆபீஸ்: 768, லோவர் வீதி, வதுளை,
பிராஞ்சு ஆபீஸ்: 92, செட்டியார்தெரு. கொழும்பு.

[2669]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 மார்ச் 24உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org